Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, DECEMBER 19, 2022

திங்கட்கிழமை டிசெம்பர் 19, 2022 | ஒளி: 08 கதிர்: 167 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# பேக்கரி உற்பத்திகளின் விலைகள் குறைந்தன



## கொத்து, சிற்றுண்டி விலையும் குறைப்பு

நேற்று முதல் (18) அமலுக்கு வரும் வகையில் ஒரு இறாத்தல் பாணின் விலை 10 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் பல பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளும் 10 ரூபாயால் குறைக்கப்பட்டு உள்ளதாகவும் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



# கனத்தையில் மீட்கப்பட்ட தொழிலதிபர் கனத்தை மாயானத்திலே நல்லடக்கம்

கடும் காயங்களுக்கு உள்ளான நிலையில், பொரளை கனத்தை மாயனத்துக்கு அருகில், காரொன்றில் கைகள் கட்டப்பட்டு, கழுத்தில் பிளாஸ்டிக் நாடா சுற்றி கட்டப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்ட தமிழ் தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் பூதவுடல், பெருந்திரளானவர்களின் அஞ்சலிக்கு மத்தியில் கனத்தை பொது மயானத்தில் ஞாயிற்றுக்கிழமை (18) நல்லடக்கம் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2

தைரியம் இல்லாத தமிழ்த் தலைமைகள் தமிழ் மக்களை

# மடையர்கள் ஆக்குகின்றனரா?



## ஆனந்த சங்கரி கேள்வி

■ கனகராசா சரவணன்

“வடக்கு, கிழக்கின் தமிழர் பகுதியில் இந்து கோவில்கள் இடிப்பு, காணிகள் அபகரிப்புகளை நிறுத்தினால் தான் அரசாங்கத்துடன் பேச்சுக்கு வருவோம் என்று சொல்லத் தைரியம் இல்லாத தமிழ் தலைமைகள், 70 வருடகாலமாக தீர்க்க முடியாத அரசியல் பிரச்சினையை ஒன்றரை மாதத்தில் ஜனாதிபதி தீர்ப்பார் என நம்பிச் சென்று, தமிழ் மக்களை மடையர்கள் ஆக்குகின்றனரா?” என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகத்தால் ஞாயிற்றுக்கிழமை (18) வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டு இருந்ததாவது, அண்மையில், சர்வகட்சி மாநாட்டை கூட்டிய ஜனாதிபதி, கட்சி தலைவர்கள் இல்லாதவர்களை அழைத்துள்ள போதும் என்னை அழைக்கவில்லை. ஏனென்றால் சங்கரி வந்தால் பிரச்சினை என்று ரணிலுக்கு தெரியும்.

2005ஆம் ஆண்டு ரணில் சமஷ்டியை தீர்வாக முன்வைத்து, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட போது இரா. சம்பந்தன் தலைமையிலான 22 எம்.பிக்கள் தேர்தலை பகிஷ்கரியுங்கள் என பிரசாரம் செய்து, ரணிலின் சமஷ்டியை தோக்கடித்து, மஹிந்தவின் ஒற்றையாட்சியை வெல்லவைத்து, ஒற்றையாட்சியை நிலைநிறுத்தி தமிழ் மக்களுக்கு துரோகம் செய்தனர்.

தொடர்ச்சி P2





# வல்லரசுகளின் போராட்டங்களில் பக்கச்சார்பின்றி செயற்படுவோம்

இலங்கை, சர்வதேச உறவுகளைப் பேணும்போது அனைத்து நாடுகளுடனும் நட்புறவுக் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உலக வல்லரசுகளின் போராட்டங்களில் இலங்கை பக்கச்சார்பின்றி அனைத்து நாடுகளுடனும் நட்புறவுடன் செயற்படுவதன் மூலம், சர்வதேசத்தின் மத்தியில் இலங்கையை நல்ல நிலைக்கு உயர்த்த முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

அதிகாரத்தை தக்க வைப்பதற்கு

# மொட்டும் ஐ.தே.கவும் ஒன்றிணைய முயற்சி



## இரு தரப்பும் ஒன்றே என்கிறார் சஜித்

மொட்டுக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் தற்போதுள்ள ஆட்டம், கிடைத்த அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வதற்கான ஆட்டமே என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஆட்சி அதிகாரத்தைப் பாதுகாத்துக்கொள்ள இருதரப்பும் ஒன்றிணைய முயல்வதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ஜனநாயக மக்கள் காங்கிரஸ்:

# இளைஞர்களுக்கு பகிரங்க அழைப்பு

## தபால்பெட்டி சின்னத்தில் பிரபா கணேசனின் புதிய கட்சி உதயமானது

தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதே எமது நோக்கமாகும். குறிப்பாக, கொழும்பு, களுத்துறை, கம்பஹா போன்ற மாவட்டங்களில் அடிப்படைத் தேவைகளுக்காக மக்கள் மிகவும் கஸ்டப்படுகின்றார்கள். அவர்கள் நிர்க்கதியாகியுள்ளனர் என ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# ரணிலை நம்புவதா, இல்லையா? என்பது பிரச்சினை இல்லை

## அதி உச்ச அதிகாரப் பகிர்வு வேண்டும் என்கிறார் சுமந்திரன்

■ வி.ரி. சகாதேவராஜா

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் சரித்திரமாக வாழ்ந்து வருகின்ற பிரதேசத்தில் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டி கட்டமைப்பில் அதியுச்ச அதிகாரப் பகிர்வு தரப்பட வேண்டும் எனவும் இதுவே, எமது தெளிவான, தீர்க்கமான முடிவாக இருக்கின்றது என்றும் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.



சுமந்திரன், ரணிலை நம்புவதா, நம்பாமல் விடுவதா என்பதெல்லாம் இப்பொழுது பிரச்சினை அல்ல என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பங்களாதேஷில் இருந்து தப்பிய

# 104 மியன்மார் அகதிகளுடன் யாழ். கடலில் தத்தளித்த படகு



பங்களாதேஷில் இருந்து படகு மூலம் தப்பிச் சென்ற 104 மியான்மார் அகதிகளை இலங்கை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



# கடலுக்குள் பாய்ந்த கார்

மாத்தறை- கதிர்காமம் பிரதான வீதியில் பல்கலைக்கழக விரிவுரையாளர் பயணித்த கார் வெல்லமடம கடலிலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது. நேற்று (18) இடம்பெற்ற குறித்த விபத்தால் அதிர்ச்சியடைந்த 50 வயதுடைய விரிவுரையாளர், மருத்துவ சிகிச்சைக்காக மாத்தறை பொது வைத்தியசாலையில்

தொடர்ச்சி P2

# கொழும்பில் பரீட்சை எழுதிய கொட்டகலை மாணவன்

■ பி.கேதீஸ்

கொட்டகலை பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கு, கொழும்பு இசிபத்தன கல்லூரியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுத அனுமதி வழங்கப்பட்டதாக நுவரெலியா வலயக் கல்விப் பணிமனையின் ஆரம்பக் கல்விக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் தேசபந்து எஸ். செல்வராஜா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# பண்டிகை காலத்தில் விசேட சுற்றிவளைப்பு

பண்டிகை காலத்தில் அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்வோர் மற்றும் பொருட்களை பதுக்கி வைத்திருப்போரைத் தேடி விசேட சுற்றிவளைப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



மிருகக்காட்சிசாலையைப் பார்வையிட

# நத்தார் வாரத்தில் இலவச அனுமதி

நத்தார் வார இறுதி நாள்களான டிசெம்பர் 23, 24, 25ஆம் திகதிகளில் தெஹிவளை மிருகக்காட்சிசாலையைப் பார்வையிடுவதற்கு குழந்தைகள் மற்றும் சிரேஷ்ட பிரஜைகளுக்கு, இலசவ அனுமதிச்சீட்டு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# தனியார் விருந்தில் ஐஸ்; 30 பேர் கைது

தனியார் விருந்தில் போதைப்பொருள் பாவித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என, பொலிஸ் ஊடக திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

பெந்தோட்டை பொலிஸ் பிரிவில் போடியொலுவ பிரதேசத்தில், விடுமுறை இல்லத்தில் இந்தத் தனியார் விருந்து சனிக்கிழமை (17) நடத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## கனத்தையில் மீட்கப்பட்ட தொழிலதிபர் கனத்தை மாயானத்திலே நல்லடக்கம்

ஜனசக்தி காப்புறுதி குழுமத்தின் பணிப்பாளரான தினேஷ் ஷாப்டர் (வயது 51), வியாழக்கிழமை (15) மாலை காரிலிருந்து மீட்கப்பட்டார். பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவர், அன்றிரவே மரணமடைந்தார்.

கறுவா தோட்டத்திலுள்ள மல் வீதி வீட்டிலிருந்து அன்றையதினம் பிற்பகல் வேளையில் புறப்பட்ட தினேஷ் ஷாப்டர், பல கோடி ரூபாய் கடன்தொகையை மீளப்பெற வேண்டும் எனத் தனது மனைவியிடம் கூறிவிட்டு சென்றுள்ளார் என்பது பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

காரில் கடத்தப்பட்ட பிரபல தொழிலதிபர், காரில் வைத்தே கடுமையாக தாக்கப்பட்டு இருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அவருடைய தொலைபேசி உரையாடல்களை ஆராய்வதற்காக தொலைபேசியை பொலிஸார் தம்வசப்படுத்தியுள்ளனர்.

கனத்தை பொது மயானத்தின் காவலாளி உள்ளிட்ட 23 பேரிடம் இதுவரையிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றனர்.

இந்நிலையில், அன்னாரது பூதவுடல் பெருந்திரளானவர்களின் அஞ்சலிக்கு மத்தியில் பொரளை பொது மயானத்தில் ஞாயிற்றுக்கிழமை (18) நல்லடக்கம் செய்யப்பட்டது.

## பேக்கரி உற்பத்திகளின் விலைகள் குறைந்தன

முன்னணி கோதுமை மா உற்பத்தியாளர்கள், ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலையை 283 ரூபாயிலிருந்து 255 ரூபாயாக குறைத்துள்ளதாக சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார். அதற்கமைய விலை குறைப்பின் பலனை பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கில் பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

180 ரூபாய் முதல் 190 ரூபாயாக விற்பனை செய்யப்பட்டு வரும் ஒரு இறாத்தல் பாணின் விலையை 10 ரூபாயால் குறைக்குமாறு அனைத்து பேக்கரி உரிமையாளர்களையும் வலியுறுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையை குறைக்க முடிந்தால் அவற்றை குறைக்குமாறு பேக்கரிகளுக்கு சங்கம் அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று (18) நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் வகையில் கொத்து ரொட்டி உட்பட கோதுமைமாவால் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களின் விலைகளை 10 ரூபாவால் குறைக்க தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமை மாவின் விலை குறைப்பே இந்தத் தீர்மானத்துக்கு காரணம் என சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

# மடையர்கள் ஆக்குகின்றனரா?

எனவே அன்று சமஷ்டி வேண்டாம் என பிரசாரம் செய்த இரா. சம்பந்தன் மற்றும் தமிழ் தலைமைகள், தற்போது வடக்கு, கிழக்கில் இந்து ஆலயங்கள் இடிப்பு, காணிஅபகரிப்பில் ஜனாதிபதி செயற்பட்டுக் கொண்டு, தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண பேச்சுக்குவருமாறு அழைக்கின்றபோது, முதலில் தமிழர்களின் காணி அபகரிப்பு, இந்து ஆலயங்கள் உடைப்பை நிறுத்தினால் தான் பேச்சுக்கு நாங்கள் வருவோம் என சொல்ல தைரியம் இல்லாதவர்கள்.

2009ஆம் இறுதி யுத்தத்தின் போது 3 இலட்சம் மக்கள் இறக்கும் போது மௌனிகளாக இருந்துவிட்டு, தமிழ் மக்களுக்கு துரோகம் செய்துவிட்டு, இன்று அரசாங்கத்துடன் வெக்கமில்லாமல் சமஷ்டியை பற்றி பேசப்போகிறனர் என்பது வேடிக்கையானது என்பதுடன் இப்படியான சூழ்நிலையில் இனி சமஷ்டி கிடைக்குமா? மக்களை ஏமாற்றினால் போதும் என அரசியல் செய்கின்றனர்.

பொருளாத நெருக்கடியால் பட்டினியால் மக்கள் சாகின்றனர். இவ்வாறு எரிகின்ற பிரச்சினையை எரியவிட்டுக் கொண்டு இருக்கின்றனர். தனது இப்போதைய ஆட்சி, ஜனநாயக ஆட்சி அல்ல என்று ரணிலுக்கு நன்றாக தெரியும்.

இந்தத் தலைவர்களின் ஊழலை பற்றி அம்பலப்படுத்தாது விடுவதால் மக்கள் அவர்களுக்கு வாக்களிக்கின்றனர். இரா. சம்மந்தன் பாராளுமன்றத்தின் படி எறத் தகுதியில்லாதவர். ஏன் என்றால் சட்டப்படி உருவாக்கப்பட்ட பாராளுமன்றம் அல்ல.

பேச்சு வார்த்தைக்கு மத்தியஸ்தம் செய்ய 3 வெளிநாடுகளை கூப்பிட வேண்டும் என அறிக்கை விட்ட அடிமுட்டாள்கள். எங்கள் மக்களை ஏமாற்றாதீர்கள்; செய்தது போதும்.

எந்த நாடும், இதை செய் என்று சொல்லமுடியாது என்பது சட்டத்தரணிகளான உங்களுக்கு தெரியாதா? ஏன் மக்களை ஏமாற்றுகிறீர்கள். இந்தியாவில் இருந்து கப்பலில் பொருட்கள் வந்ததும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் சென்று அங்கு அருகில் நிற்கின்றனர்.

என்னவென்றால் நாங்கள் சொல்லித்தான் இந்தியா பொருட்களுடன் வந்தது என சுரேஷ் பிரேமசந்திரன் உட்பட தமிழ் தலைமைகள். இவர்கள் தமது வரலாற்றை பின்னோக்கி பார்க்கவேண்டும்.

அப்போதுதான், தாங்கள் சொந்த மக்களுக்கு எவ்வளவு தூரம் ஏமாற்றி, துரோகம் செய்துள்ளமை தெரியும். இல்லை என்று ஒருவர் சொல்லட்டும் நான் பகிரங்கமாக மேடைக்குவர தயார்" என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மொட்டும் ஐ.தேகவும் ஒன்றிணைய முயற்சி

குருநாகல் மாவட்டம், பிங்கிரிய தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் சனிக்கிழமை (17) கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மொட்டு ஒன்று சேர்ந்து, ஜனாதிபதிக்கு கிண்ணம் வழங்கி, தொப்பி அணிவித்துள்ளது. அவர்கள் இருவரும் இப்போது இரு தரப்பல்ல; ஒரே தரப்பெனவும் சுட்டிக்காட்டினார்.

தண்ணீருக்குப் பயந்து பைத்தியக்கார நாய்களைக் குளிப்பாட்ட முடியாது. அதேபோன்றே, தேர்தல்களுக்கு பயந்த அரசாங்கத்தை தேர்தலுக்கு அழைத்துச் செல்ல முடியாது எனவும் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கத்துக்கு தெரிந்த, கூறும் அனைத்து சதிகளையும் அரசாங்கம் செய்து கொண்டிருப்பதாக தெரிவித்த அவர், ஏற்றுக் கொள்ளத்தக்க காரணம் ஏதும் இல்லாவிட்டால், வானிலை காரணத்தைக் கூடக் கூறி தேர்தலை ஒத்திவைப்பார்கள் என்றார்.

போலிக் கூட்டணியில் சேர்ந்து நாட்டை சீரழிப்பதற்குப் பதிலாக, தூய அணியுடன் இணைந்து இலங்கையை முதல் நிலைக்கு ஸ்தானப்படுத்த அழைப்பு விடுப்பதாகவும் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்பாட்டுப் பிரதானியும் எம்.பியுமான நளின் பண்டார இதனை ஏற்பாடு செய்திருந்ததோடு, ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் இதில் கலந்து கொண்டனர்.

## இளைஞர்களுக்கு...

ஜனநாயக மக்கள் காங்கிரஸ் அரசியல் கட்சியாகப் பதிவுசெய்யப்பட்டு, அதன் தபால்பெட்டி சின்னத்தை அறிமுகம் செய்துவைக்கும் நிகழ்வு, சுகததாச உள்ளரங்க விடுதியில் சனிக்கிழமை (17) நடைபெற்றது. கட்சியின் நிர்வாகக் கட்டமைப்பு உறுப்பினர்களை அறிமுகப்படுத்தி வைத்து, பிரபா கணேசன் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:

எமது கட்சியை பல காரணங்களைக் காட்டி, தேர்தல்கள் ஆணைக்குழு 12 வருடங்களாக அங்கிகரிக்கவில்லை. இருப்பினும் இம்முறை எமது கட்சியை அங்கிகரித்துள்ளது. பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சி என்ற முறையில், எதிர்காலத்தில் மிகவும் உத்வேகத்துடன் செயற்பட முடிவுசெய்துள்ளோம். தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு அப்பால், பாரிய பல பிரச்சினைகளை தமிழ் பேசும் மக்கள் எதிர்கொள்கின்றார்கள். அவை இன்னும் தீர்த்துவைக்கப்படவில்லை.

எதிர்வரும் காலத்தில் நடைபெறும் அனைத்துத் தேர்தல்களிலும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் நாடு முழுவதிலும் போட்டியிடும். எவரது வாக்குகளையும் தட்டிப்பறிப்பதோ, எவரையும் விமர்சிப்பதோ எமது நோக்கம் இல்லை. மாறாக, மக்களுக்கு நாம் எவ்வாறு சேவையாற்ற உள்ளோம் என்பதையே தெரிவிக்க விரும்புகின்றோம். அதேவேளை, மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி, வாக்குகளைப் பெற்று, அவர்களின் தேவைகளை நிறைவேற்றாமல் உதாசீனப்படுத்துபவர்களை அடையாளப்படுத்தவும் தயங்கமாட்டோம்.

பாராளுமன்ற உறுப்பினராக 2010 முதல் 2015 வரை இருந்த காலத்தில், கொழும்பு மாவட்ட தமிழ்ப் பாடசாலைகளுக்கு நான் ஆற்றிய சேவைகளை தமிழ் மக்கள் இன்னும் மறக்கவில்லை. இன்றும் பாடசாலை அனுமதிக்காக பெற்றோர்கள் என்னிடம் வருகின்றார்கள். இன்றும்கூட பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை, கட்டட வசதியின்மை, தளபாடங்கள் இல்லாமை எனப் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன.

எந்தவொரு தேசிய கட்சியுடனும் இணைந்து செயற்பட நாம் தீர்மானிக்கவில்லை. இன்றைய காலத்தின் தேவை நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதாகும். இரண்டாவது, பாரிய பிரச்சினையாக இருப்பது, போதைப்பொருள் வியாபாரமும் பாவனையும் ஆகும். இவற்றை இல்லாதொழிக்க அனைத்துவிதமான வேலைத்திட்டங்களையும் நாம் முன்னெடுப்போம்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, வன்னி, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் எமது அரசியல் செயற்பாடுகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எமது கட்சிக் கட்டமைப்புக்குள் பெருமளவு இளைஞர்களை உள்வாங்குவதற்குத் தீர்மானித்துள்ளோம். பெண்களின் நிறைவான பங்களிப்புகளையும் உறுதிப்படுத்துவோம். நேர்மையான இளைஞர்கள் எம்முடன் கைகோர்க்க முன்வருமாறும் பிரபா கணேசன் பகிரங்க அழைப்பும் விடுத்தார்.

## வல்லரசுகளின் போராட்டங்களில் பக்கச்சார்பின்றி செயற்படுவோம்

தியத்தலாவ இராணுவ கல்வியியற் கல்லூரியின் 97 ஆவது பயிற்சியை முடித்து வெளியேறும் கெடட் உத்தியோகத்தர்களின் பிரியாவிடை மரியாதை அணிவகுப்பு சனிக்கிழமை (17) இடம்பெற்றது.

அங்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த ஜனாதிபதி அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"இலங்கை இராணுவத்தின் தலைவர்கள் என்ற வகையில் உங்களுக்கும் இன்று முதல் பொறுப்பு உள்ளது. அதன்படி, இராணுவத்தையும் அதன் வீரர்களையும் பாதுகாக்கும் பொறுப்பு உங்களுக்கு உள்ளது. மக்களின் அரசாங்கம் என்ற வகையில் உங்களுக்கு இந்தப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அவர்களைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு. எதிரிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பும் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. . ஒரு நாடு என்ற அடிப்படையில் நாம் உலக வல்லரசுகளிடமிருந்து ஒரு தரப்பாக பிரிந்து நிற்கவில்லை. உலக வல்லரசுகளுடன் நாம் ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை. ஏனென்றால் நாம் ஒரு தீவு நாடு. அனைத்து நாடுகளுடனும் நட்புறவுடன் செயற்பட வேண்டும்.

இந்த நாட்டைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு. உள்ளக மற்றும் வெளிப்புற தாக்கங்களிலிருந்து நாட்டைப் பாதுகாக்கும் திறன் உங்களிடம் உள்ளது. உங்களை உள்ளடக்கிய எங்கள் இராணுவத்துக்கு இராணுவ அனுபவம் உள்ளது. மேலும் அவர்களுக்கு சர்வதேச போர் அனுபவம் உள்ளது.

அதனால் சவால்களை சமாளிக்க முடியும். எதிர்காலத்தில் வரக்கூடிய சவால்களை எதிர்கொள்ளும் திறன் உங்களுக்கு உள்ளது. எனவே, அந்தப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்து, நீங்கள் அனைவரும் வலுவாக முன்னேறுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.

தியத்தலாவ இராணுவ கல்வியியற் கல்லூரியில் பயிற்சியை நிறைவு செய்த 351 கெடட் உத்தியோகத்தர்கள் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டதுடன், வெளிநாடுகளைச் சேர்ந்த நான்கு கெடட் உத்தியோகத்தர்களும் இங்கு பயிற்சி பெற்று அதிகாரிகளாக நியமிக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

## ரணிலை நம்புவதா, இல்லையா? என்பது பிரச்சினை இல்லை

காரைதீவில் சனிக்கிழமை (17) இடம்பெற்ற பொதுமக்கள் சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்று நாட்டில் சிங்கள மக்கள் மத்தியில் ஒரு விதமான மனமாற்றம் தென்படுகின்றது. இதனை நாங்கள் சாதகமாகப் பயன்படுத்தி, எமது மக்களது பிரச்சினையை தீர்க்க வேண்டிய காலம் கனிந்து இருக்கின்றது.

அரசுடன் பேசாமல் எதுவும் செய்ய முடியாது. அங்கு நமது தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வு பற்றி தெளிவாக எடுத்துரைப்போம்.

அதாவது, வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் சரித்திரமாக வாழ்ந்து வருகின்ற பிரதேசத்தில் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டி கட்டமைப்பில் அதியுச்ச அதிகார பகிர்வு தரப்பட வேண்டும்.

இதுவே, எமது தெளிவான தீர்க்கமாக முடிவாக இருக்கின்றது. இதனை நாங்கள் ஜனாதிபதியிடம் நிச்சயம் தெளிவுபடுத்த இருக்கின்றோம். ரணிலை நம்புவதா, நம்பாமல் விடுவதா என்பதெல்லாம் இப்பொழுது பிரச்சினை அல்ல.

எமது தீர்வை அங்கு சொல்ல வேண்டும். அதற்கு அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது தான் இப்பொழுது பிரச்சினை. கடும் சிங்கள தேசியவாதம் உருவாகின்ற பௌத்த சம்மேளனம் போன்ற அரங்குகளில் நாங்கள் சமஷ்டி பற்றி பேசி இருக்கின்றோம். அவர்கள் அதனை மௌனமாக ஏற்றுக் கொண்டார்கள் .

இந்த நாட்டிலே தேர்தல் மூலமாக மட்டுமே ஆட்சி மாற்றம் இடம்பெற்றது. தேர்தல் இன்றி எந்த ஆட்சி மாற்றமும் இதுவரை இடம் பெறவில்லை.

ஆனால், அண்மையில் காலிமுகத்திடலில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் சரித்திரத்தில் இடம்பெற்றது. அசைக்க முடியாது என்று சொல்லும் அளவுக்கு மேல் இருந்த கோட்டா முதல் மொட்டு அரசாங்கம் வரை கவிழ்த்து விட்டது" என்றார்.

## பண்டிகை காலத்தில் விசேட சுற்றிவளைப்பு

பிரதேச ரீதியில் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு இந்த விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தப்படுவதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சாந்த நிரிஎல்ல தெரிவித்துள்ளார். அடுத்த வாரம் முதல் இந்த செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்தவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

## கடலுக்குள் பாய்ந்த கார்

அனுமதிக்கப்பட்டுள்ளார். தெவிநுவரவில் இருந்து மாத்தறை நோக்கி வந்து கொண்டிருந்த போது கார் வீதியை விட்டு விலகி கடலில் விழுந்த போது, அருகில் இருந்த மக்கள், சாரதி ஆசனத்தில் இருந்த விரிவுரையாளரைக் காப்பாற்றி கரைக்கு கொண்டு வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## 104 மியன்மார் அகதிகளுடன்...

இலங்கை கடற்பரப்பில் வெந்தலை தீவுக்கு அப்பால், பருத்தித்துறையில் இருந்து 18 கடல் மைல் தொலைவில் ஒரு பெரிய மீன்பிடி படகை அவதானித்த மீனவர்கள் உடனடியாக வடக்கு கடற்படை கட்டளை பீடத்துக்கு தகவல் வழங்கியதையடுத்து கடற்படையினர் 3 படகுகளை அந்த இடத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

சனிக்கிழமை (17) மாலை வேளையில் மீனவர்களால் வழங்கப்பட்ட தகவலை அடுத்து, கடற்படையினரால் மீட்கப்பட்ட குறித்த படகு, காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அருகில் சனிக்கிழமை இரவு கொண்டு செல்லப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி, ஞாயிற்றுக்கிழமை காலை கிடைத்ததைத் தொடர்ந்து படகில் இருந்தவர்கள் கடற்படையினரால் முகாமிற்கு மாற்றப்பட்டதுடன், மருத்துவ சிகிச்சை தேவைப்பட்ட நான்கு பேர் தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

பங்களாதேஷில் இருந்து இந்தோனேசியாவுக்கு தப்பிச் சென்ற போது, தமது மீன்பிடி படகு நடுக்கடலில் இயந்திரக் கோளாறு காரணமாக, தத்தளிக்கத் தொடங்கியதாக கூறிய அவர்கள், ஐ.நா வழங்கிய அகதிகளுக்கான அடையாள அட்டையை வைத்திருந்தாக தெரிவிக்கப்படுகிறது.

## கொழும்பில் பரீட்சை எழுதிய...

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "நேற்றைய தினம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் தோற்ற இருந்த மாணவர் ஒருவர், திடீர் சுகவீனம் காரணமாக சனிக்கிழமை கொழும்பிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த மாணவன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்ற இருந்தமையால் அவரை, நேற்று மாத்திரம் வைத்தியசாலையிலிருந்து விடுவித்து, பரீட்சை எழுதிய பின்னர் மீண்டும் அடுத்த தினம் வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு வைத்தியசாலை நிர்வாகம் பணித்திருந்தது.

எனினும், அந்த மாணவனுக்கு கொழும்பிலிருந்து மீண்டும் கொட்டகலைக்கு பயணம் செய்து பரீட்சை எழுதுவதற்கான சூழ்நிலை இருக்கவில்லை. இதையடுத்து வகுப்பாசிரியர் மற்றும் மாணவனின் பெற்றோர், நுவரெலியா கல்வி வலயத்தின் ஆரம்பக்கல்விக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளரான எனது கவனத்துக்கு கொண்டுவந்தனர்.

பரீட்சைகள் ஆணையாளர் ஜீவராணி புனிதாவை தொலைபேசியில் தொடர்பு கொண்ட நான், தேவையான சகல ஆவணங்களையும் மின்னஞ்சல் ஊடாக அவருக்கு அனுப்பி வைத்தேன்.

அதற்கு அமைய பரீட்சை ஆணையாளர், குறித்த மாணவன் தற்காலிகமாக வசிக்கும் தமது உறவினர் வீட்டுக்கு அருகாமையிலுள்ள கொழும்பு இசிப்பத்தன கல்லூரியில் பரீட்சை எழுதுவதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்" என்றார்.

# தனியார் விருந்தில் ஐஸ்; 30 பேர் கைது

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதலின் போது, 1 கிராம் 535 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருடன் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 21 வயதுக்கும் 37 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனத் தெரிவித்த பொலிஸார், அவர்கள, வத்தளை, கொழும்பு-12, நாரஹேன்பிட்ட, கொட்டாஞ்சேனை, மாளிகாவத்தை, மட்டக்குளிய மற்றும் வலஸ்முல்ல பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர் என்றும் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை பலப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த பெந்தோட்டை பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## நத்தார் வாரத்தில் இலவச அனுமதி

பாடசாலை விடுமுறை நாள்களையொட்டி 'வன விலங்குகள் எங்கள் நண்பன்' என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக விலங்கியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதற்கிணங்க டிசெம்பர் 23 முதல் 25 ஆம் திகதி வரை குழந்தைகளுக்கு இலவச நுழைவுச் சீட்டு வழங்கப்படும் என்றும் டிசெம்பர் 24ஆம் திகதி சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலசவ நுழைவுச் சீட்டு வழங்கப்படும் என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

# தேர்தலின் மூலமாக தீர்வு காண முடியாது



உள்ளூராட்சி சபைத் தேர்தலின் மூலம் நாட்டின் பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த நேரத்தில் தேர்தல் கேட்கப்படுவதன் காரணம் அரசியல் தேவையைத் தவிர உண்மையான தேர்தலின் தேவை ஒன்று அல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அமைச்சர் தெரிவித்துள்ளார் எந்த நேரத்திலும் தேர்தலை சந்திக்க அரசாங்கம் தயாராக உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

புதிய கூட்டணியுடன் தேர்தலில் போட்டியிடப் போவதாகவும், அதற்காக ஏற்கெனவே 8 கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும், விரைவில் சின்னம் குறித்து முடிவு செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கம்பஹா, உடுகம்பொல பிரதேசத்தில் சனிக்கிழமை (17) இடம்பெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் பின்வருமாறு கூறினார்.

கொரோனா தொற்று காரணமாக உள்ளூராட்சித் தேர்தலை ஓராண்டுக்கு ஒத்திவைக்கும் நிலை அரசுக்கு ஏற்பட்டது. தேர்தல் தள்ளிப்போகும் என்று நாங்கள் யாரும் கூறவில்லை. ஆனால், எதிர்க்கட்சிகள் அப்படியொரு சித்தாந்தத்தை நாட்டில் கட்டியெழுப்ப முயற்சிக்கின்றன.

கடந்த காலங்களிலே நடந்த விடயங்கள் திருத்தப்படுவது தாமதமானால் பழைய முறையிலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என தனிப்பட்ட முறையில் நான் நம்புகிறேன்.

ஐ.தே.க, ஸ்ரீலங்கா கட்சி, மொட்டுக் கட்சி ஜே.வி.பியில் இருந்து பிரிந்து சென்றவர்கள் அனைவரும் ஒரே கொள்கைக்கு வந்திருப்பது இந்த தருணத்தில் மிகப்பெரிய சாதனையாகும். தேர்தல் வெற்றியை தீர்மானிக்கும் அதிகாரத்தை மக்களுக்கு வழங்க வேண்டும். ஜே.வி.பி உட்பட சில கட்சிகள் எப்போதும் பெருமையடிப்பதைத் தவிர வேறு எந்த வேலையும் செய்யவில்லை.

அமைதியான போராட்டத்தை சிலர் அபகரித்தனர். போதைக்கு அடிமையானவர்களும், கஞ்சா வியாபாரிகளும், விபச்சாரிகளும் அதில் இருந்தார்கள் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறுகின்றனர். பேராசிரியர்கள் மீது தாக்குதல் நடத்துதல், வீடுகளை எரித்தல் போன்றவை போராட்டத்தில் இருந்தே ஆரம்பித்தது.

நாட்டில் நிம்மதியாக வாழ்வது, தாம் பெறும் சம்பளத்திற்கு ஏற்ற பொருளாதாரத்தை நாட்டில் உருவாக்குவது போன்ற விடயங்களைத் தவிர மற்றுமொரு போராட்டத்தை மக்கள் எதிர்பார்க்கவில்லை.

இந்த நெருக்கடியில் இருந்து எப்படி மீள்வது என்று நாம் பார்க்க வேண்டும். இன்று நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். சுற்றுலா பயணிகள் வரும்போது வெளிநாட்டு கையிருப்பு அதிகரிக்கிறது. பின்னர் போராட்டம் தொடங்குகிறது.

இந்த நெருக்கடியை நாம் ஒன்றாக எதிர்கொள்ள வேண்டும். தனித்தனியாக செயற்படுவதால் நாட்டுக்கு எந்த நன்மையும் ஏற்படாது எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

### பேராதனைப் பல்கலைக்கழகத்தின்

## முதலாம் வருட மாணவன் மீது சிரேஷ்ட மாணவன் தாக்குதல்

**ஷேன் செனவிரத்ன**

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட சிரேஷ்ட மாணவனொருவன் முதலாம் வருட மாணவனைத் தாக்கிய சம்பவமொன்று சனிக்கிழமை (17) பதிவாகியுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விடுதிக்குள் வைத்தே இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மதுபோதையில் வந்த சிரேஷ்ட மாணவன் முதலாம் வருட மாணவனை தாக்கியதாகவும் இதன்போது காயமடைந்த மாணவன், பேராதனை வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுக்கு இலக்கான முதலாம் வருட மாணவன் நோட்டன் பிரிட்ஜ் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் தாக்குதல் நடத்திய மாணவன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் பேராதனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் பேராதனைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





## குருபூசை நிகழ்வு...

புத்தளம்– சேகுவந்தீவு கிராமத்தின் ஸ்ரீ முருகன் அறநெறி பாடசாலையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களின் குருபூசை நிகழ்வு, ஞாயிற்றுக்கிழமை (18) அனுஷ்டிக்கப்பட்டது.
(எம்.யூ.எம்.சனூன்)



## 24 ஆவது கொடகே சாகித்திய விழா

24 ஆவது கொடகே சாகித்திய விழா தேசிய நூலக சபை கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை (15) நடைபெற்றது.

இதில் தமிழ் நூல்களுக்கான விருதுகளுக்கு இலக்கியப் புரவலர் ஹாஸிம் ஓமர் தலைமை வகித்தததுடன், தேசப்பந்து சிரிசுமன கொடகே, திருமதி நந்தா கொடகே ஆகியோருடன் இணைந்து விருதுகளை வழங்கி வைத்தார்.

இதன்போது, சிறந்த நாவலுக்கு ஆ.மு.. சி வேலழகனின் " அன்புடையர் பிறர்க்கு" என்ற நாவலுக்கும், சிறந்த சிறுகதைத் தொகுதிக்கு பாலரஞ்சனி ஜெயபாலின் "நெத்திக்காசு" என்ற சிறுகதைத் தொகுதிக்கும், சிறந்த கவிதைத் தொகுதிக்கு ஏ.கே.முஜாரத்தின் "கடுவன் பூனை" என்ற கவிதைத்தொகுதிக்கும், முதல் நூலுக்கான விருது ஜன்ஸி கபூரின் "பிறப்பிட நிழலிலே" எனும் நூலுக்கும் விருதுகள் வழங்கிவைக்கப்பட்டன.

அத்துடன், இரா. சடகோபனின் மொழிபெயர்ப்பு நூலான "தேத்தண்ணிக்கும்" , ஆக்க இலக்கிய பிரதிப் போட்டியில் தெரிவான சிறந்த நாவலான ஏ.எஸ். உபைத்துல்லாவின் "வேராகிப் போன மனிதர்கள்" எனும் நாவலுக்கும், சிறந்த சிறுகதைத் தொகுதியான எஸ்.பாயிஸா அலியின் "ஒளிப் பொட்டுகளாய் உருமாறி" எனும் சிறுகதைத் தொகுதிக்கும், சிறந்த கவிதைத் தொகுதியான "மலைகளின் பாடல் " எனும் கவிதைத் தொகுதிக்கும் விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.

## வேதன உயர்வு யோசனையால் ஆலோசனை சபையில் கருத்து மோதல்

**எஸ்.கணேசன்**

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன உயர்வு தொடர்பான யோசனை முன்வைத்த போது முதலாளிமார் சம்மேளனத்திற்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையே கடுமையான கருத்து மோதல்கள் ஏற்பட்டன.

தேசிய தொழிலாளர் ஆலோசனை சபை கூட்டம் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் அண்மையில் கூடியது.

ஆலோசனை சபை கூட்டத்தில் அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர், தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள், முதலாளிமார்களின் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

நாட்டின் தொழில்துறை அபிவிருத்தி தொடர்பாக பலதரப்பட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்ட போதிலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின்



உப தலைவரும் ஆலோசனை சபையின் உறுப்பினருமான பாரத் அருள்சாமி பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன உயர்வு தொடர்பான யோசனை முன்வைத்த போது முதலாளிமார் சம்மேளனத்திற்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையே கருத்து மோதல்கள் ஏற்பட்டன.

இதன் போது கருத்து தெரிவித்த பாரத் அருள்சாமி நீதிமன்றத்தின் பிரகாரம் தொழிலாளர்களுக்கு சார்பாக சம்பள நிர்ணய சபையின் தீர்மானத்தை முன்கொண்டு செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ள நிலையில் பெருந்தோட்ட கம்பெனிகள் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளின் மூலமாக தொழிலாளர்களின் உழைப்பை பறிப்பது மாத்திரமன்றி அவர்களின் உரிமையையும் நசுக்குகின்றன. பல்வேறுப்பட்ட தொழில் பிணக்குகள் முதலாளிமார் சமேளனத்தினால் தொடுக்கப்பட்ட வழக்கினை காரணம் காட்டி தட்டிக் கழிக்கப்பட்டு வருகின்றன என்றார்.

தேயிலைத் தொழில்துறையின் வளர்ச்சி அதிகரித்துள்ள நிலையில் தொழிலாளர்களின் வேதனைமானது அதே நிலையிலேயே உள்ளது. டொலர் வீக்கத்தின் பயனை கம்பெனிகள் பெற்ற போதிலும் அதில் எந்தவிதமான நன்மையும் தொழிலாளர்கள் பெறவும் இல்லை மாறாக அவர்களின் உழைப்பே சுரண்டப்படுகின்றன. எமது நாட்டிற்கு அந்நிய செலவாணி அவசியம்தான் ஆனால் அது எமது அப்பாவி தொழிலாளர்களின் உயிர்களில் அடையக்கூடாது என்பதை வலியுறுத்தினார். சரியான ஊதிய முறையும் அறிமுகப்படுத்தவும் கூட்ட ஒப்பந்தத்தை மீண்டும் கொண்டு வரவும் தன் முடிவெடுக்க உள்ளதாக உறுதி வழங்கினார்.

## புதிய கடற்படை தளபதி நியமனம்



இலங்கை கடற்படையின் 25ஆவது கடற்படை தளபதியாக நியமிக்கப்பட்ட வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா தனது கடமைகளை ஞாயிற்றுக்கிழமை (18) பொறுப்பேற்றுக்கொண்டார்.

ரியர் அட்மிரலாக பதவி வகித்த பிரியந்த பெரேரா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அண்மையில், வைஸ் அட்மிரலாக பதவியுயர்த்தப்பட்டார்.

முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன, புதிய கடற்படை தளபதியை சம்பிரதாயபூர்வமாக வரவேற்றார். இந்த வைபவம், கடற்படை தலைமையகத்தில் ஞாயிற்றுக்கிழமை (18) நடைபெற்றது.




## சிறு செய்திகள்

நாட்டின் பல பகுதிகளிலும் சனிக்கிழமை(17) அன்று இடம்பெற்ற பல்வேறான சம்பவங்கள் தொடர்பில், பொலிஸ் நிலையங்களுக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் அடிப்படையில் பொலிஸ் திணைக்களத்தின் ஊடகப் பிரிவால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் இருந்த செய்திகளில் சில...

### உள்ளூர் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

நிக்கரவெட்டிய, கிரில்ல பொலிஸ் நிலையத்தின் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவல்களை அடுத்து, சனிக்கிழமை (17) வந்துராகல தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு தேடுதலின் போது, உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் 63 வயதானவர் கைது செய்யப்பட்டார். அவரை நிக்கரவெட்டிய நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### சட்டவிரோத மதுபானத்துடன் ஒருவர் கைது

நீர்கொழும்பு மெசன் பிரதேசத்தில் சனிக்கிழமை (17) மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு தேடுதலின் போது, சட்டவிரோதமான மதுபானம் 200 லீற்றர். சட்டவிரோத மதுபானத்தை தயாரிப்பதற்கான கோடா 1,680 லீற்றர், எட்டு பெரல்கள் உள்ளிட்ட உபகரணங்கள் கைப்பற்றப்பட்டதுடன் அதே பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதானவர் கைது செய்யப்பட்டார். அவரை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### இனந்தெரியாத சடலம் மீட்பு

மாத்தறை ப்ரௌன்ஸ்ஹில் பிரதேசத்தில் கடற்கரையோரத்தில் 45 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 5 அடி 3 அங்குலம் உயரமான அச்சடலத்தை அடையாளம் காட்டுமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சனிக்கிழமை (17) மீட்கப்பட்ட சடலம், மாத்தறை வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

### 8ஆவது மாடியிலிருந்து குதித்த பெண் மரணம்

நீர்கொழும்பு வைத்தியசாலையின் எட்டாவது மாடியில் இருந்து குதித்த நீர்கொழும்பை சேர்ந்த 55 வயதான பெண் மரணமடைந்துள்ளார்.

சனிக்கிழமை (17) குதித்த, அந்தப் பெண் வயிற்றுவலி காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். சம்பவதினத்தன்று வாட்டில் இருந்து தப்பியோடி, எட்டாவது மாடியில் இருந்து கீழே குதித்துள்ளார். கடும் காயங்களுக்கு உள்ளான நிலையில், தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டார். எனினும், மரணமடைந்துள்ளார்.

### ஹெரோய்னுடன் பெண் கைது

பொரளை சீமாட்டி வைத்தியசாலைக்கு முன்பாக, 20 கிராம் 29 மில்லிகிராம் தம்வசம் வைத்திருந்த சந்தேகநபரான பெண், சனிக்கிழமை (17) கைது செய்யப்பட்டார்.

41 வயதான இந்தப் பெண், கல்கிஸையைச் சேர்ந்தவர் என்றும் அப்பெண்ணை மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, 6 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் மற்றுமொரு சந்தேகநபர் கல்கிஸையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். 30 வயதான இவர், தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவித்த பொலிஸார், சந்தேகநபரை கல்கிஸை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 'ஐஸ்' வைத்திருந்தவர் சிக்கினார்

தலங்கம பொலிஸ் பிரிவில் சூபூத்திபுர பிரதேசத்தில் 5 கிராம் 500 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 46 வயதான நபரொருவர் சனிக்கிழமை (17) அன்று கைது செய்யப்பட்டார்.

அவரை கடுவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

### தொல்பொருள் அகழந்த 10 பேர் கைது

தொல்பொருள்களை தேடி அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதில், அறுவர் கலேவெல பொலிஸ் பிரிவில் வைத்து கைது செய்யப்பட்டனர். பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, அகழ்வதற்கு பயன்படுத்தப்பட்ட ஸ்கேன் இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்கள், பூஜை பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

ரைகது செய்யப்பட்ட அறுவரும் 19 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் அவர்கள், மடபான, பன்குளம, தம்புள்ளை,தெஹியோவிட்ட மற்றும் மெகொடவெவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

கைது செய்யப்பட்டவர்களை, தம்புள்ளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், நிக்கரவெட்டிய பிரதேசத்தில் வைத்து, நால்வர் கைது செய்யப்பட்டனர். சனிக்கிழமை (17) கிடைத்த தகவல்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே, இந்த நால்வரும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து தொல்பொருள் அகழ்வுக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள், பூஜை பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட நால்வரும் 25 வயதுக்கும் 72 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனத் தெரிவித்த பொலிஸார், அவர்களை அனைவரையும் நிக்கரவெட்டிய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தனர்.

### மிதந்த சடலம் மீட்பு

களனி கங்கையில் வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொடுவில எனுமிடத்தில் மிதந்துகொண்டிருந்த இனந்தெரியாத ஆண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சனிக்கிழமை (17) மீட்கப்பட்ட டலத்தை அடையாளம் காண்பிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கிழக்கை தனித்து கையாள்வதற்கு இடமளிக்கமுடியாது

## எம்.ஏ சுமந்திரன் எம்.பி

■ வி.ரி சகாதேவராஜா

கிழக்கில் தமிழர்கள் தனித்து பெரும்பான்மையை நிலை நாட்ட முடியாது என்பதால்த்தான், ஜனாதிபதி உட்பட பல அரசியல்வாதிகள் கிழக்கை தனித்து ஒதுக்கி நடக்க முயலுகின்றனர்; அதற்கு இடமளிக்க முடியாது என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

சனிக்கிழமை (17) அம்பாறை மாவட்டத்துக்கு சூறாவளி சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு, முதலில் திருக்கோவிலுக்கு விஜயம் செய்தபோது இடம்பெற்ற கட்சி உறுப்பினர்களுடனான கூட்டத்தில் பேசும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக் கூட்டம், பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தலைமையில் திருக்கோவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் நடைபெற்றது. அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; அம்பாறையும் திருகோணமலையும் ஆபத்தான நிலையில் உள்ளன. வடக்கு, கிழக்கில் மிகமுக்கியமாக எங்களது கரிசனை கிழக்கினை நோக்கி இருக்க வேண்டும் என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் பேசுகையில், வடக்கு, கிழக்கு பிரச்சினை என இரண்டாகப் பிரித்து, தீர்வுத் திட்டத்தை முன்மொழிவது ஜனாதிபதியின் பிரித்தாளும் தந்திரமாக உள்ளது. அதேபோல் உள்ளூராட்சி சபை பிரிப்புகளும் இந்தவகையில் அமைய கூடாது; எல்லை நிர்ணயம் சரியாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

# சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் முயற்சிக்கு துணைபோக வேண்டாம்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம் கோரிக்கை

■ சண்முகம் தவசீலன்

அரசாங்கங்களால் காலத்துக் காலம் அமைக்கப்படுகின்ற விசாரணை ஆணைக்குழுக்கள், அரசாங்க ஆதரவு உடையவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் அவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதற்காகவும் சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கும் அமைக்கப்பட்டு உள்ளதாகவும் இதற்குள் எமது உறவுகள் அகப்பட வேண்டாம் எனவும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.




முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்க தலைவர் மரியசுரேஸ் ஈஸ்வரி, செயலாளர் பிரபாகரன் ரஞ்சனா ஆகியோர் ஊடக சந்திப்பு ஒன்றை நேற்று (18) முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நடத்தியிருந்தனர்.

இதன்போது அவர்கள் கருத்து தெரிவித்ததாவது: திங்கட்கிழமை (19), செவ்வாய்க்கிழமை(20) ஆகிய நாள்களில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் காணாமல் போனோருக்கான அலுவலகத்தால், மக்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அத்துடன், அரசாங்கங்களால் காலத்துக் காலம் அமைக்கப்படுகின்ற விசாரணை ஆணைக்குழுக்கள், அரசாங்க ஆதரவு உடையவர்களின் வேலை வாய்ப்பையும் அவர்களுடைய வருமானத்தையும் அதிகரிப்பதற்கும் அவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதற்காகவும் சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கும் அமைக்கப்பட்டுள்ளது எனவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

அத்துடன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் தொடர்பிலும் இங்கு கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ‘தண்ணீருக்கு எத்தனை கண்கள்’



■ பாறுக் ஷிஹான்

கவிஞர் சோலைக்கிளி எழுதிய ‘தண்ணீருக்கு எத்தனை கண்கள்’ நூல் அறிமுக விழா சனிக்கிழமை (17) கல்முனை தனியார் மண்டபத்தில் அருந்தந்தை அன்புராசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதிகளாக ஶ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கலந்துகொண்டு, கவிதை நூலை வெளியீட்டு வைத்தார்கள்.



கலாபூசணம் பாலமுனை பாறூக், எழுத்தாளர் எஸ். எல்.மன்சூர், கவிஞர்களான உமாவரதராஜன், அக்கரையூர் அப்துல் குத்தூஸ் ஆகியோர் இலக்கிய சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொண்டனர். எழுத்தாளர்களான எம். அப்துல் றஸ்ஸாக், பேராசிரியர் எஸ்.எம் ஐயூப் ஆகியோர் நூல் மீதான உரையை நிகழ்த்தினர்.

# காத்தான்குடி பிரதேச செயலகத்துக்கு இரண்டாமிடம்



■ எம்.எஸ்.எம் நூர்தீன்

தேசிய உற்பத்தி திறன் போட்டியில், காத்தான்குடி பிரதேச செயலகம் தேசிய மட்டத்தில் இரண்டாமிடத்தை பெற்றுள்ளது. அதற்கான விருது, கொழும்பில் அலரி மாளிகையில் வைத்து வியாழக்கிழமை (15) நடைபெற்ற வைபவத்தின் போது வழங்கப்பட்டது. காத்தான்குடி பிரதேச செயலாளர் யு. உதய சிறீதரிடம் இவ் விருதும் சான்றிதழும் வழங்கப்பட்டன.

### கிளிநொச்சி மாவட்டத்தில்

# 24 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் 2022ஆம் ஆண்டில் 24 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஒன்பது பொலிஸ் நிலையங்களிலும், 16 வயதுக்கு குறைவான 14 சிறுமியர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். ஒரு குழந்தை கொலை முயற்சிக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் பாதுகாக்கப்பட்டுள்ளது. 07 சிறுவர்கள் அடித்து காயப்படுத்தப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதேபோன்று 07 சிறுவர்கள் மீது பாலியல் சேட்டைகள் புரியப்பட்டதாக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இதேவேளை, மாணவர்கள் மத்தியில் வீதி விபத்துகள், போதைப்பொருள் தடுப்பு, சிறு குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் இந்த ஆண்டில் 215 வரையான விழிப்புணர்வு செயலமர்வுகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

### தனிப்பட்ட நபரால் அபகரிக்கப்பட்ட

# துயிலும் இல்ல காணியை விடுவிக்க போராட்டம்



■ சண்முகம் தவசீலன்

அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணியின் ஒரு பகுதியை இராணுவத்தினரும் இன்னொரு பகுதியை தனியார் ஒருவரும் ஆக்கிரமித்துள்ளனர். இதில் தனியார் ஆக்கிரமித்த காணியை விடுவிக்கக் கோரி, நேற்று (18) கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது

இதன்போது, வடக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தலைமையிலான மாவீரர்களின் உறவினர் சுமார் 400 பேர் உட்பட கிராம மக்களும் இணைந்து, குறித்த இடத்தில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இரு தரப்புக்கும் இடையில் இடம்பெற்ற கருத்துப் பரிமாற்றங்களை அடுத்து குறித்த பகுதியில் புதைகுளி அமைந்துள்ள பகுதியை விடுவிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

### திருகோணமலை பட்டினமும் சூழலும்

# பிரதேச செயலக கேட்போர் கூடம் திறப்பு



■ எப். முபாரக்

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக கேட்போர் கூடம் வெள்ளிக்கிழமை (16) மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என் ஜயவிக்ரமவால் திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கேட்போர் கூட புனர்நிர்மாண பணி காரணமாக, அலுவலக கூட்டங்கள் உள்ளிட்ட செயலமர்வுகளை இடர்பாடின்றி மேற்கொள்ள ஏதுவாக அமையும்.

இந்நிகழ்வில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பி. தனேஸ்வரன் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# வடக்கு, கிழக்கு புனர்வாழ்வு அமைப்பின் ஊடாக உதவித் திட்டங்கள்

■ பாறுக் ஷிஹான்

வடக்கு, கிழக்கு புனர்வாழ்வு அமைப்பின் ஊடாக கல்வி மற்றும் வாழ்வாதார உதவி திட்டங்கள் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, திருக்கோவில் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாச கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டன.

சனிக்கிழமை (17) நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன், இ. சாணக்கியன், தவராசா கலையரசன், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், சமூக செயற்பாட்டாளர் செல்வராஜா கணேஸ் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.



# இந்துக் குருமார்களுக்கான பயிற்சி பட்டறை



■ மன்னார் நிருபர்

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், மன்னார் மாவட்டச் செயலகம், மன்னார் மாவட்ட இந்து குருமார் பேரவையுடன் இணைந்து நடத்திய இளம் இந்து குருமார்களுக்கான விசேட பயிற்சி பட்டறை சனிக்கிழமை (17) உப்புக்குளம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் மன்னார் மாவட்ட இந்து குருமார் பேரவையின் தலைவர் சிவஸ்ரீ கருணானந்த குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, மன்னார் மாவட்ட இந்து மத பீடத்தின் தலைவர் சிவஸ்ரீ மஹா தர்மகுமார குருக்கள், வளவாளர்களாக முனீஸ்வரன் ஆலய தர்மகர்த்தாவும் யாழ். பல்கலைக்கழகத்தின் இந்து கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி பத்மநாப சர்மா ஆகியோரும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வுக்கான ஒழுங்குகளை மன்னார் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ. நித்யானந்தன் ஏற்பாடு செய்திருந்தார்.

# மரக்கன்றுகள் நடுகை



■ நடராசா கிருஸ்ணகுமார்

வன்னி தமிழ் மக்கள் ஒன்றியம், பூநகரி இளைஞர் கழக பிரதேச சம்மேளனம், விநாயகர் இளைஞர் கழகம், விநாயகர் விளையாட்டு கழகம் இணைந்து, முழங்காவில் வைத்தியசாலை வீதியின் இருமருங்கிலும் மரக்கன்றுகளை நேற்று முன்தினம் (17) நாட்டினர்.

பூநகரி பிரதேச இளைஞர் கழக சம்மேளன தலைவர் மு. சப்கான் தலைமையில் பூநகரி பிரதேச தவிசாளர் சி. சிறிரஞ்சன், பூநகரி பிரதேச செயலக இளைஞர் சேவை உத்தியோகத்தர் அ. ஜெயாளன், வன்னி தமிழ் மக்கள் ஒன்றியம் முதன்மை ஒருங்கிணைப்பாளர் லக்சிதரன் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# சுத்தமான குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம்

■ எம்.எம் அஹமட் அனாம்.

கோறளைப்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் பாலைநகர் கிராமத்தில் உள்ள மக்களுக்கு சுத்தமான குடிநீர் இணைப்பை வழங்கும் திட்டத்தை அனீஸ் ஹாஜியார் பவுன்டேஷன் முன்னெடுத்து வருகின்றது.



இதன் ஆரம்ப கட்டமாக, தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் 11 குடும்பங்களுக்கு இணைப்புகான பணம் செலுத்தப்பட்ட பற்றச்சீட்டு வழங்கும் நிகழ்வு பாலைநகர் றஹ்மானியா ஜும்ஆ பள்ளிவாயலில் இடம்பெற்றது.

பள்ளிவாயல் செயலாளர் ஏ.யூ. அசனார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அதிதிகளாக அனீஸ் ஹாஜியார் பவுன்டேஷனின் திட்ட இணைப்பாளர் ஆர்.எம் புஹாரி, ஓட்டமாவடி பிரதேச சபையின் தியாவட்டவான் வட்டாரத்துக்கான உறுப்பினர் ஏ.ஜி அஸீஸுல் றஹீம், கிராம சேவை உத்தியோகத்தர் எம்.எம் அன்வர் சதாத், ஓட்டமாவடி வர்த்தக சங்க தலைவர் எம்.ஏ.சி. எம் நியாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அரியவகை காட்டு விலங்கை வேட்டையாடியவர் கைது

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் காடுகளில் வாழும் அரியவகை மிருகங்களில் ஒன்றான பாரிய அழுங்கை இறைச்சிக்காக பிடித்தவரை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் கைதுசெய்துள்ளார்கள்.

துணுக்காய், தேராங்கண்டல் பகுதியில் இறைச்சிக்கு பயன்படுத்த இருந்த நிலையில் இருந்த ஆமடில்லா (அழுங்கு) என்றழைக்கப்படும் காட்டு விலங்கை கிளிநொச்சி மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினர் உயிருடன் மீட்டுள்ளதுடன் அதைக் கொண்டு சென்றவரையும் கைதுசெய்துள்ளார்கள்.



# ஆர்வத்துடன் தோற்றினர்...

நாடு முழுவதும் தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமை பரிசில் பரீட்சையானது, ஞாயிற்றுக்கிழமை (18) காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி, பகல் 12.15 மணிக்கு நிறைவடைந்தது.

2,894 மத்திய நிலையங்களில் நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு இந்த வருடம் மூன்று லட்சத்து 34 ஆயிரத்து 698 பரீட்சார்த்திகள் தோற்றுவதற்கு தகுதி பெற்றிருந்தனர். மலையகத்திலும் பரீசார்த்திகள் மிக ஆர்வத்துடன் பரீட்சை மண்டபங்களுக்கு சென்றதை அவதானிக்க முடிந்திருந்தது.

மலையக நிருபர்கள்




















# பெருந்தோட்டப் பிள்ளைகளின் கல்வித் தரம் உயர்த்தப்படும்

## இராஜாங்க அமைச்சர் ரோஹன தெரிவிப்பு

**மஹேஸ் கீர்த்திரத்ன**

பெருந்தோட்டங்களில் வாழும் பிள்ளைகளின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு தேவையான மன மற்றும் உடல் மேம்பாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் செயற்பட்டு வருவதாக சிறுவர் மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தளை- கந்தேநுவர தம்பலகல பிரதேசத்தில் இடம்பெற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

தோட்ட மக்களின் பொருளாதார சமூகத்தை மேம்படுத்த தற்போதைய அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. குறிப்பாக தோட்டங்களில் வாழும் இளைஞர்களுக்கு, நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் இளைஞர்களுக்கு வழங்குகின்ற உரிமைகளை அவர்களுக்கு வழங்குவதற்காக செயற்பட்டு வருகின்றது என்றார்.



தற்போது மாவட்டம் முழுவதும் புலமைப்பரிசில் திட்டத்தை ஆரம்பித்து வருகின்றோம். இதில் அதிகமாக தோட்டங்களில் வாழும் பாடசாலை மாணவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றோம்.

மேலும் பெருந்தோட்ட சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஒவ்வொன்றாக தீர்த்து வைக்கவும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் செயற்படுவதாகத் தெரிவித்த அவர், மாத்தளை மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தலைமைத்துவத்தை ஏற்கவும் தான் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

# கௌரவிப்பு...







கந்தப்பளையில் இயங்கும் நிவ் "டைனிங் டொட்ஸ்" ஆரம்ப பாடசாலையில் பயிலும் சிறார்களுக்கான வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (18) காலை சர்மிளா வரவேற்பு மண்டபத்தில் அதிபர் திரேஸா நெட்டோ தலைமையில் இடம்பெற்றது.கந்தப்பளை,இராகலை, ஹைபொரஸ்ட் பிரதேச ஆரம்ப பாடசாலைகளின் சிறார்கள் இதில் கலந்து கொண்டு அவர்கள் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் அதிதிகளான கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார்,நுவரெலியா பிரதேச சபை தலைவர் வேலு யோகராஜ் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களுடன்,மத குருக்களும் கலந்து கொண்டு சிறார்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்து கௌரவித்தனர்.

ஆ.ரமேஸ்

# நால்வர் கைது

நோர்வூட் -போட்ரி தோட்டத்தில் அனுமதிப்பத்திரமின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் நோர்வூட் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சனிக்கிழமை (17) மாலை கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் நால்வரும் 17 தொடக்கம் 42 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் இவர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் இன்று (19) ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# சின்னராணிவத்தை வீடொன்று எரிந்தது

**துவாரகஷான், ஆ.ரமேஸ்**

தலவாக்கலை- லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னராணிவத்தை தோட்டத்தில் வெள்ளிக்கிழமை(16) மாலை 5 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தினால் வீடு ஒன்று முற்றாக எரிந்து சாம்பலாகியது.

இதன் போது வீட்டிலிருந்த பெறுமதி மிக்க சொத்துக்களும் தீயில் எரிந்து கருகியுள்ளன.

தீபரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இது தொடர்பான விசாரணையை லிந்துலை பொலிஸார்



முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு தேவையான நிவாரண உதவிகளை தோட்ட நிர்வாகம் வழங்கி வரும் நிலையில்,

இந்த தீ விபத்தை அறிந்து அக்கரப்பத்தனை பிரதேச சபை தவிசாளர், இராமன் கோபால் மற்றும் இ.தொ.கா உப தலைவர் சச்சிதானந்தன் ஆகியோர் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட வீட்டை பார்வையிட்டனர்.

அத்துடன் தீயால் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு உடனடியாக தற்காலிக வீடு ஒன்றை பெற்றுக்கொடுப்பது தொடர்பில், தோட்ட அதிகாரியுடன் பேச்சுவார்த்தை ஒன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## தனிநபர் நாடகப் போட்டியில்

# ஆனந்தன் அசேலன் முதலாமிடம்

**செ.தி.பெருமாள்**




கண்டி -டீ. எஸ்.சேனாநாயக்க தேசிய கல்லூரியில் நடைபெற்ற, பாடசாலைகளுக்கு இடையிலான தனிநபர் நாடக போட்டியில், சீட்டனை சேர்ந்தவரும் ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியின் மாணவருமான செல்வன் ஆனந்தன் அசேலன் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்று வெற்றிப்பெற்றுள்ளார்.

## களஞ்சியசாலையிலிருந்து

# ஒரு தொகை உரம் மாயம் ஒருவர் கைது

**ஆ.ரமேஸ்**

கந்தப்பளை -ஹைபோரஸ்ட் இலக்கம் 01 தோட்ட தொழிற்சாலையின் களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த இரசாயன உரம் மற்றும் மருந்து வகைகளில் ஒரு தொகை காணாமல்போயுள்ளமை தொடர்பில், களஞ்சியசாலைக்கு பொறுப்பான உத்தியோகஸ்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

தோட்டத் தொழிற்சாலை களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த 10 இலட்சத்து 59 ஆயிரத்து 309 ரூபாய் பெறுமதியான உரம் மற்றும் மருந்து வகைகள் காணாமற் போயுள்ளன.

> **ந்தேக நபரை வலப்பனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என ஹைபோரஸ்ட் பொலிஸார் தெரிவித்தனர்**

நவம்பர் மாதம் 28ஆம் திகதி தொடக்கம் இந்த மாதம் 12ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் இவை காணாமற் போயுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தோட்ட அதிகாரி, ஹைபோரஸ்ட் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து, முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் களஞ்சியசாலைக்கு பொறுப்பான உத்தியோகஸ்தர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஆரம்பக்கட்ட விசாரணைகளையடுத்து, சந்தேக நபரை வலப்பனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என ஹைபோரஸ்ட் பொலிஸார் தெரிவித்தனர்

# கொட்டகலையில் ஐயப்பன் ஜோதி பூஜை

**எஸ்.கணேசன்**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில் ஐயப்ப சுவாமியின் ஜோதி பூஜை நிகழ்வு சனிக்கிழமை (17) இரவு கொட்டகலை சீ.எல்.எப். வளாகத்தில் நடைபெற்றது.

இந்த பூஜை வழிபாட்டிற்கு இலங்கையில் பல பாகங்களிலும் உள்ள ஐயப்ப சுவாமிக்கு மாலை அணிந்த அனைத்து குரு சுவாமிகள் உட்பட சுவாமிமார்களும் கலந்து கொண்டு பூஜை வழிபாடுகளில் ஈடுப்பட்டனர்.

மேலும், நிகழ்வை சிறப்பிக்க தென்னிந்தியாவின் பிரபல பக்தி பாடகர் அபிஷேக் வீரமணி ராஜூவின் இசைக்கச்சேரியும் இடம்பெற்றமை குறிப்பிடதக்கது.



# கெலேகால ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் திருட்டு

**எஸ். கே. குமார்**

நுவரெலியா- நானுஓயா வீதிக்கு அருகிலுள்ள கெலேகால ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தின் பிரதான நுழைவாயில் உடைக்கப்பட்டுஆலயத்தில் இருந்த பெறுமதியான தங்க நகைகள் மற்றும் உண்டியல் பணம் ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

வெள்ளிக்கிழமை ( 16 ) இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.



## வீதி புனரமைப்பு இடைநிறுத்தம் தொடர்பில்

# ஜனாதிபதிக்கு 'குழந்தை' கடிதம்

**எஸ்.சதீஸ்**

நோர்வூட் -பொகவந்தலாவை வரையிலான பிரதான வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நோர்வூட் பிரதேசசபையின் தவிசாளர், ரவி குழந்தைவேல் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, எதிர்வரும் 22ஆம் திகதி நுவரெலியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் இதன்போது, நுவரெலியா மாவட்டத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை ஜனாதிபதியின்



கவனத்துக்கு கொண்டுசெல்ல உள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்கமைய, நோர்வூட் தொடக்கம் பொகவந்தலாவை வரையிலான 14 கிலோமீற்றர் தூரத்தின் புனரமைப்பு பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் அறிவிப்பேன் என்றார்.

குறித்த வீதி ஊடாக வைத்தியசாலைகளுக்கு அவசர நோயாளர்களைக் கொண்டு செல்லும் போது, இடை நடுவில் நோயாளர்கள் சிலர் உயிரிழந்த சம்பவங்களும் அண்மைக் காலங்களில் பதிவாகியுள்ளன.

அத்துடன், இந்த வீதியூடாக போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்கள் உள்ளிட்ட வாகனங்கள் அடிக்கடி பழுதடைவதனால் வாகன சாரதிகளும் பெரிதும் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி வருகின்றனர். எனவே, இந்த விடயங்களை கருத்திற் கொண்டு, இந்த விடயம் தொடர்பில், ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளதாக நோர்வூட்பி ரதேச சபை தவிசாளர் ரவி குழந்தைவேல் தெரிவித்தார் .

# எதை யார் கொடுத்தாலும் வாங்கவோ, சாப்பிடவோ வேண்டாம்

வீட்டிலிருக்கும் அத்தனை பேரும், வேலைக்குச் சென்றால் கூட சமாளிக்க முடியாத நிலையில் பொருளாதாரம் கழுத்தை நெரித்துக்கொண்டிருக்கும் இக்காலத்தில், தங்களுடைய பிள்ளைகளின் பின்னாலே, வீட்டிலொருவர் காவலுக்குச் செல்லவேண்டிய நிலையில் காலம் கெட்டுக்கிடக்கிறது.

எதையும் சரி, பிழையென ஆராய்ந்து பார்க்கும் துடிப்பு கொண்டவர்கள்தான் மாணவர்கள். நல்லது, தீயவற்றைக்கூட வகையறிந்து கொள்வர். நல்ல பழக்கத்தை வழக்கமாக்கிக் கொண்டவர்கள், அடுத்தடுத்த கட்டங்களைக் ரம்மியமாக்கிக்கொள்வர். தீய பழக்கங்களைக் தொற்றிக்கொண்டு அடிமையானவர்கள், மாணவப் பருவத்தை வீணாக்கிக்கொள்கின்றனர்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து போதைப்பொருள் விநியோகம், மிகவும் சூட்சுமமான முறையில் இடம்பெற்று வருகின்றது. உயர்தரம், சாதாரண தரங்களைச் சேர்ந்த மாணவர்கள், பகிரங்கமாகவே அவற்றை பயன்படுத்துகின்றனர்.

தனியார் விருந்து எனும் பெயரில், சமூக வலைத்தளங்களின் ஊடாக ஒன்றிணையும் குழுக்கள், போதைப்பொருட்களைப் பயன்படுத்தி சிக்கிக்கொள்கின்றனர். அந்தளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது. பாடசாலைகளுக்கு அருகில் போதைப்பொருள் விற்றவர்கள் அல்லது பயன்படுத்தியவர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

பிரத்தியேக வகுப்புகள் எனக்கூறிச் செல்லும் மாணவர்கள், மாணவிகள் போதைப்பொருட்களை பயன்படுத்துகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. பெற்றோர் எந்தநேரமும் மாணவமாணவிகளுக்கு பின்னால் காவல்காக்க முடியாது என்பதை மாணவர்கள் விளங்கிக்கொள்ளவேண்டும்.

இதற்கிடையே, பாடசாலை மாணவர்களின் புத்தகப்பைகள் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. நகர வர்த்தகர்களும் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர். பள்ளிவாசல் நிர்வாகங்களும் கடுமையான கட்டளைகளை பிறப்பித்துள்ளன. ஆக, போதைப்பொருளை சமூகத்தில் இருந்து முற்றாக துடைத்தெறிய வேண்டுமென்பதே சகலரினமும் நோக்கமாகும்.

எனினும், போதைப்பொருட்களை கைப்பற்றும் சம்பவங்களும் நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கின்றன. தனது தீர்மானத்தின் பிரகாரம், போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதித்திருந்தால் நாடு இவ்வாறானதொரு நிலைமைக்குள் சென்றிருக்காது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

ஆக, போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு அதியுட்சபட்ச தண்டனை வழங்கும் வகையில் சட்டத்தில் உடனடியாக திருத்தங்களை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும். அதன் பின்னர், ஓரளவுக்கேனும் போதைப்பொருள் வர்த்தகத்தைத் தடுக்கலாம்.

போதைப்பொருள் விநியோகஸ்தர்களை கைது செய்து அவர்களிடமிருந்து பெறும் தகவல்களின் அடிப்படையில், பெரும் முதலைகளை சிக்கவைக்கமுடியும். அதற்கான துரித நடவடிக்கைகளை சட்டம் ஒழுங்கை காக்கும் பொலிஸ் திணைக்களமே முன்னெடுக்கவேண்டும்.

பாடசாலைகளின் வாயில்களில் வைத்து மாணவர்களின் புத்தகப்பைகள் சோதனைக்கு உட்படுத்துவதால், மாணவர்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகக்கூடும். ஆகையால், யார், எதைக் கொடுத்தாலும் வாங்கவே வேண்டாமென, தங்களுடைய பிள்ளைகளுக்கு பெற்றோர் அறிவுரை கூறி, அதைக் கடைப்பிடிக்கச் செய்தால் மட்டுமே, ஒவ்வொரு பிள்ளையையும் காப்பாற்ற முடியும்.

அதேபோல, தங்களுக்குத் தெரிந்த அல்லது தெரியாதவர்கள் எதைக் கொடுத்தாலும் வாங்கக்கூடாது என்பதில் மாணவர்களும் உறுதியாக இருந்தல் அவசியமாகும் என்பதை சுட்டிக்காட்டுவது எமது கடமையாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

விழிப்பும் உறக்கமும் ஒவ்வொரு நாளும் நடப்பதாகும். எனினும் உண்மையான விழிப்புநிலை எமக்கானதும் இந்த உலகத்துக்கானதுமாகும்.

எமக்காக மட்டும் வாழ்தல் வெறும் உறக்கத்துடன் மட்டும் சஞ்சரிப்பது மட்டுமேயாகும். கடமைகளைச் செய்யாதவன் விழித்தபடியும் உறங்கியபடியும், தான் பிறந்த இந்த உலகத்துக்கு எதுவும் செய்யாமல் வாழ்கின்றான். தாங்கும் பூமித்தாய்க்கு பாரமாக இருத்தல் ஆகாது!

பிறர் செய்யும் சேவைகளைப் பார்த்தாவது, தன்னைத்தான் உணரவேண்டும். சுறுசுறுப்பாக வேலைசெய்வதைவிட சந்தோசம் வேறொன்றும் இல்லை.

நிகழ்கால உழைப்பே வருங்கால வருமதியாகும். வினாடிப் பொழுதும் வீணாகத் தேயக்கூடாது. சின்ன வயதிலேயே கல்வியுடன் இணையவேண்டும். வாலிபம் வந்து கருமங்களைச் செய்யும்போது, நாம் பூமிக்கான சேவைகளுக்காக ஒரு பகுதியை ஒதுக்க வேண்டும்.

உயிர் பிரிந்தாலும் சேவை செய்பவன் மரணிப்பதில்லை. நற்பணி செய்பவர்களுக்கு கால வேறுபாடுகள் இல்லை.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

# நிலஅபகரிப்புகளுக்கு எதிரான தீர்வு அரசியலமைப்பின் அங்கமாயிருக்க வேண்டும்

ஹஸ்பர் ஏ ஹலீம்

வடக்கு, கிழக்கில் வாழும் சிறுபான்மை சமூகம், காலாகாலமாக எந்த அரசாங்கம் ஆட்சிக்கு மாறிமாறி வந்தாலும் ஒடுக்கப்படுகிறது. இந்தநிலை மாற வேண்டும் என வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

தனியாருக்கு சொந்தமான காணிகள், அரச திணைக்களத்தினர் மூலமாக குறிப்பாக, தொல்பொருள் என்ற போர்வையில் அபகரிக்கப்படுவதும், மக்களின் வீதிப் போராட்டங்களும் தொடர்கின்றன. சிறுபான்மை இனமக்கள், தங்களது தீர்வு கோரிய போராட்டத்தை, முன்னெடுத்துள்ளனர். இது வடக்கு, கிழக்கில் தற்போது வரை இடம்பெற்று வருகிறது. போராட்கங்களின் ஊடாகத்தான், காணி அபகரிப்பு போன்ற மக்கள் சொத்துகளை பாதுகாக்கும் நிலைமை உள்ளது.

தொல்பொருள் என்ற போர்வையிலான நில அபகரிப்பு தொடர்பில், ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இது தொடர்பில் பின்வருமாறு தெரிவித்த கருத்துகள் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவையாகும்.

கிழக்கு மாகாணம் குறிப்பாக, திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் காணிப் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். சிலர் அதன் மூலம் இன ரீதியிலான பிரச்சினைகளை உருவாக்க முயலுகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் காணிப் பிரச்சினை என்பது, மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இன்று இந்தக் காணி விடயங்களால் இன ரீதியிலான குழப்பங்களை ஏற்படுத்துகின்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் பிரதேச செயலக பிரிவில் தோப்பூர், உல்லைக்குளம் கிராமத்தில் 576 ஏக்கர் காணியில் குறிப்பாக 96 தமிழ், 110 முஸ்லிம் விவசாயிகளும் விவசாயம் செய்தனர். அதில் சிலருக்கு 1930ஆம் ஆண்டு ஆங்கிலேயே ஆட்சிக்காலத்தின் காணி அனுமதி பத்திரமும், ஏனைய சிலருக்கு 1976-1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்ட ஆட்சி உறுதி காணப்படுகின்றது.

யுத்தம் உக்கிரமடைந்த காலங்களில், அந்தப் பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்ததால் முஸ்லிம்கள் விவசாய நடவடிக்கையில் ஈடுபடாமல் இருந்தார்கள். 2009க்கு பிற்பாடு தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக விவசாய நடடிக்கையில் ஈடுபடும் பகுதியாக உல்லைக்குளம் காணப்பட்டது.

எனினும், தற்போது அரசியல் பின்புலங்களை கொண்ட சிலரின் உதவியுடன் அரச காணிகளை தனியாருக்கு, பணத்துக்கு வழங்குகின்ற நடவடிக்கையில் ஈடுபடுகின்ற ஒரு கூட்டம், காணிக்கு பொறுப்பான அதிகாரிகளை இணைத்துக்கொண்டு, காணிப் பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள். அண்மையில், மூதூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், கிழக்கு மாகாண ஆளுநர், காணிகளை பொலிஸ், இராணுவத்தை வரவழைத்து அளவிட உத்தரவிட்டதையும் அத்துமீறுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என எச்சரித்தும் இருந்தார்கள்.

மக்கள் உண்பதற்கு கூட வழியில்லாமல் பொருளாதார சிக்கலில் இருக்கின்ற நிலையில், காணி பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் காணிப் பிரச்சினைக்கு உடனடி தீர்வை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறாக, திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலகப் பகுதியிலும் சிறுபான்மை மக்களின் காணிகளை அடாத்தாக கையகப்படுத்த முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

நிலங்கள் சம்மந்தமாக தொல்லியல் திணைக்களம் இதுபோல வெவ்வேறு சட்டங்களின் கீழ் இயங்கும் திணைக்களங்கள், மக்களுடைய காணிகளை அபகரிக்கும் செயற்பாடு வடக்கிலும் கிழக்கிலும் நீண்ட காலமாக இடம் பெற்று வருகின்றது என ஜனாதிபதி சட்டத்தரணியுமான தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ சுமந்திரன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் தென்னைமரவாடி, திரியாய் போன்ற பகுதிகளில் தமிழ் விவசாயிகளின் பூர்வீக காணிகளில் விவசாயத்தில் ஈடுபட தொல்பொருள் திணைக்களம் தடுப்பதற்கு எதிராக, திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கில் ஆஜராகிய பின்னர் அவர் ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் பேசும் மக்களின் பூர்வீக காணிகளை அபகரிக்கின்ற செயலை, தொல்பொருள் திணைக்களம் அரங்கேற்றி வருகின்றது. அதன் ஒரு பிரதிபலிப்புத் தான் திருகோணமலை மாவட்டம் திரியாய், தென்னமரவாடி கிராமத்தில் தமிழ் மக்களின் பூர்வீக விவசாயக் காணிகளில், விவசாயம் செய்வதற்கு தடுத்த ஒரு சம்பவம், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றது.

அந்தவேளையில், நிலத்துக்கு உரித்தான விவசாயிகள் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, இடைக்கால தடை உத்தரவைப் பெற்றிருந்தார்கள். அந்த வழக்கை ஆதரித்து வாதாடியவர் சட்டத்தரணி கேசவன் சயந்தன். இடைக்கால உத்தரவை மேல் நீதிமன்றம் வழங்கி, தொல்பொருள் திணைக்களம் விவாயிகளுக்கு இடையூறு கொடுக்க கூடாது; விவசாயிகள் தங்கள் நிலங்களில் விவசாயம் செய்ய உரித்துடையவர்கள் என கட்டளை பிறப்பித்திருந்தது.

அந்த வருடம், விவசாயிகள் தங்களுடைய விவசாய நிலங்களில் செய்கையை மேற்கொண்டு, அறுவடை செய்யக் கூடியதாக இருந்தது. ஆனால், அதற்கு பிறகு தொடர்ச்சியாக விவசாயிகள் தடுக்கப்பட்டனர். வேறு பல அச்சுறுத்தல்களுக்கும் விவசாயம் செய்வதற்கான தடுப்புகளும் மேற் கொள்ளப்பட்டு, தங்களுடைய விவசாய நடவடிக்கைகளை இவ்வருடமும் மேற்கொள்ள முடியாதவர்களாக காணப்படுகின்றனர்.

இந்தப் பின்னனியிலே, இறுதி விவாதத்துக்கு கடந்த செப்டெம்பர் 30ஆம் திகதி மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு எடுக்கப்பட்டது. சட்டத்தரணி கேசவன் சயந்தனுடன் நானும் இந்த வழக்கிலே ஆஜராகி வாதாடி இருக்கின்றோம். மிக முக்கியமாக மாகாண மேல் நீதிமன்றுக்கு நிலம் சம்மந்தமான எழுத்தாணைகளை வழங்குகின்ற அதிகாரம் இல்லை என்ற வாதத்தை அரச தரப்பு முன்வைத்திருந்தது.

அரசியலமைப்பின்படி காணி அதிகாரம் மாகாணத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. மாகாண நீதிமன்றம் எழுத்தாணை வழங்குகின்ற போது எந்த ஒரு நபருக்கு எதிராகவும் மாகாண நிரலில் உள்ள விடயம் சம்மந்தமாக எழுத்தாணை வழங்க முடியும் என்று சொல்லபட்டிருக்கின்றது. அரசியலமைப்பில் உள்ள குறித்த விடயத்தை மன்றுக்கு நாம் சுட்டிக் காட்டியுள்ளோம்.

100 வருடங்களுக்கு முற்பட்ட காணி உறுதிகள், குறித்த காணி உரிமையாளர்கள் வசம் உள்ளன. அவற்றை நாம் வழக்கிலே காட்சிப்படுத்தி இருக்கின்றோம். ஆகையால் இது அரச காணி அல்ல; தனியார் காணி. இந்தக் காணிகளிலே தங்களுடைய விவசாயத்தை செய்வதற்கு அவர்களுக்கு உரித்துண்டு. அதை தடுப்பதற்கு எவருக்கும் உரித்தில்லை என்ற வாதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என ஜனாதிபதி சட்டத்தரணியும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

நிலங்கள் சம்மந்தமாக தொல்லியல் திணைக்களம் இதுபோல வெவ்வேறு சட்டங்களின் கீழ் இயங்கும் திணைக்களங்கள், மக்களுடைய காணிகளை அபகரிக்கின்ற செயற்பாடு, வடக்கிலும் கிழக்கிலும் நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறாக திருகோணமலை மாவட்டத்திலும் குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்களுடைய காணி அபகரிப்பு தீவிரமாக இடம்பெற்று வந்தாலும் அதனை மீளப்பெற முடியாமலும், மக்கள் உரிமைகளை வென்றெடுக்க முடியாத வண்ணமும் அப்பாவி மக்கள் தடுமாறுகின்றனர். நீதியான நியாயமான தீர்ப்புகளை எதிர்பார்க்கின்றனர்.

தொல்லியல் திணைக்களம் இப்படியான செயற்பாடுகளை தனியார் காணியில் மட்டுமல்ல, மதஸ்தலங்களிலும் கை வைத்து வருகின்றது. அண்மையில் திருகோணேஸ்வர ஆலய கடைத் தொகுதி விவகாரமும் தொல்பொருள் என்ற நிலையில் அகற்ற வேண்டி ஏற்பட்ட போதும் அது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தை பார்வையிட தொல்பொருள் அமைச்சர் விதும் விக்கிரமநாயக்க நேரில் சென்று 11.10.2022 அன்று ஆராய்ந்து கோவில் பரிபாலன சபையினருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ரணில் அரசாங்கம் தொடக்கம் முன்னாள் கோட்டாபய அரசாங்கம் வரையில், சிறுபான்மை இனத்தை இலக்கு வைத்து தொல்பொருளை மையமாக வைத்து, நில ஆக்கிரமிப்பை நடத்த தொடர் முயற்சிகள் செய்யப்பட்ட வருகின்றன.

இலங்கையின் வடக்கு, கிழக்கு வாழும் தமிழ்பேசும் மக்கள், ஆட்சிக்கு வந்த சிங்களப் பெரும்பான்மை அரசுகளின் இனவாதக் கொள்கைகளால், பல்வேறு வழிகளிலும் அடக்கப்பட்டு வருகின்றார்கள். இது இன்று வரை தொடர்வது யதார்த்தமான உள்ளது. நீதியான போராட்டங்களை கூட நடத்த முடியாது; நடத்தினால் கைது செய்யப்படுகிறார்கள்.

இப்படியாக, அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு சுதந்திரமற்ற நிலையில், உரிமைகள் மறுக்கப்பட்டு வாழ்கின்ற சமூகமாக, சிறுபான்மை இன மக்கள் மாற்றப்பட்டுள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் தொல்பொருள் மாத்திரமல்ல; இது போன்று, அரச படையினர் கூட மக்களின் பல காணிகளில் பலாத்காரமாக குடியிருந்து வருகின்றனர்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கான நில அபகரிப்புகளுக்கு எதிரான தீர்வு, இலங்கையின் அரசியலமைப்பின் அங்கமாயிருக்க வேண்டும்.

## கடிதங்கள்

### மாங்குளம் பஸ் நிலையத்தைத் திறவுங்கள்



மாங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள பஸ் நிலையத்தை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என பொது மக்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இக்கட்டடம் அமைக்கப்பட்டு மூன்றாண்டுகளுக்கும் அதிகமான காலம் சென்றுவிட்ட போதிலும், பஸ்நிலையத்தை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை. பல இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இக்கட்டடம், ஏன் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவில்லை? அதிகாரிகள் ஏன் மந்த கதியில் செயற்படுகின்றனர் என்பது விளங்கவில்லை என மாங்குளம் பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன. பஸ் நிலையம் அருகில் அமைக்கப்பட்டுள்ள மலசலகூட கட்டடத் தொகுதி, பயனற்ற நிலையில் கால்நடைகளின் உறைவிடமாக காணப்படுகின்றது.

1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் போரால் பல தடவைகள் மாங்குளம் நகரம் அழிக்கப்பட்டது. இந்நகரத்தில் மக்களுக்கான பொது மலசல கூடம் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. அமைக்கப்பட்டுள்ள பொதுமலசல கூடக் கட்டடத்தைப் பயன்படுத்துவதற்கான வழிகள் ஏற்படுத்தப்படவில்லை.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை இவ்விடயத்தில் அக்கறை செலுத்தவில்லை என்பதே வெளிப்படையாகத் தெரிவதாக பொது மக்களால் விசனத்துடன் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே, மாங்குளம் பஸ் நிலையத்தை, மக்கள் பாவனைக்கு கையளிப்பதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாகும்.

–நடராசா கிருஸ்ணகுமார்

# mRetail கட்டமைப்பை SLT-MOBITEL அறிமுகம் செய்துள்ளது









SLT-MOBITEL, தனது mRetail தீர்வின் அறிமுகத்தினூடாக, நாட்டின் விற்பனைப் பிரிவில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்த முன்வந்துள்ளது. இந்தக் கட்டமைப்பினூடாக, விற்பனையாளர்களுக்கு தமது வாடிக்கையாளர்களுக்கு அதிகளவு வெகுமதிகள் நிறைந்த சொப்பிங் அனுபவத்தை டிஜிட்டல் கட்டமைப்பினூடாக பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

வாடிக்கையாளர்களுக்கு இந்த உயர் தர அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ள விற்பனையாளர்களில் ஒன்றாக Edinborough இன் Grandeur -பல்பொருள் விற்பனைத் தொடர் அமைந்துள்ளது. புரட்சிகரமான mRetail கட்டமைப்புடன் இணைந்து கொண்ட புதிய விற்பனையாளராக இது அமைந்துள்ளது. mRetail உடன் வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற பாதுகாப்பான கொடுப்பனவுகள் மற்றும் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள், mCash ஊடாக பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு போன்றவற்றை மேற்கொள்ள முடியும்.

mRetail கட்டமைப்பில் காணப்படும் சில பிரத்தியேகமான உள்ளம்சங்களில், Cloud செயற்படுத்தப்பட்ட விற்பனை POS இயந்திரங்கள், பிரத்தியேகமான mCash Total Digital Banking Payment Gateway தீர்வுகள், வர்த்தக நாம ஊக்குவிப்புகளுக்காக டிஜிட்டல் காட்சிப்படுத்தல்கள் மற்றும் வாடிக்கையாளர் லோயல்டி கட்டமைப்பு நிர்வாகத் தீர்வுகள் போன்றன அடங்கியுள்ளன. mRetail செயற்படுத்தப்பட்ட சகல விற்பனையகங்களிலும், SLT-MOBITEL இன் Club Magnet வாடிக்கையாளர்களுக்கு இந்த பிரத்தியேக சேவைகளை வழங்கும் வகையில் இந்தச் சேவை நீடிக்கப்பட்டுள்ளது. SLT-MOBITEL இணைப்புத்திறன் சேவைகளுடன் வாடிக்கையாளர்களுக்கு சுய செயற்படுத்தல் SIM சேவைகளுடன் உடனடியாக இணைப்பை ஏற்படுத்தும் வசதி வழங்கப்படுகின்றது.

மேலும், mRetail கட்டமைப்பின் வலுவை பயன்படுத்த தீர்மானிக்கும் விற்பனையாளர்களுக்கு, பிரிவு அடிப்படையிலான விற்பனை சந்தைப்படுத்தல், mAgents ஊடாக Ecochannelling பல்பொருள் விநியோகம் போன்றவற்றின் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

### செலான் மொபைல் வங்கிச் சேவை

# App இனூடாக ஒன்லைன் சௌகரியம் அதிகரிப்பு





செலான் வங்கி, தனது மொபைல் வங்கிச் சேவை app ஐ மெருகேற்றம் செய்துள்ளது. அதனூடாக சிறந்த பாதுகாப்பு மற்றும் சௌகரியம் போன்றவற்றை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதை மேலும் உறுதி செய்துள்ளது. இந்த மெருகேற்றம் செய்யப்பட்ட app என்பது, எந்தப் பகுதியிலிருந்தும் வழமையான வங்கிக் கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுப்பதற்கு சிறந்த தீர்வாக அமைந்திருக்கும்.

சௌகரியமான பாவனையாளர் உட்கட்டமைப்பை கொண்டதாக இந்த app இன் பிந்திய வெளியீடு அமைந்துள்ளது. விரல் ரேகை மற்றும் முக அடையாளம் போன்றவற்றை உறுதி செய்து login செய்யும் வசதியைக் கொண்டுள்ளதுடன், கணக்கு விவரங்களை பார்வையிடுவதற்கு மிகவும் பாதுகாப்பான அனுமதியை வழங்குகின்றது. App இனுள் பாதுகாப்பான முறையில் கடவுச் சொல்லை மாற்றிக் கொள்ளும் வசதியும் பாவனையாளருக்கு வழங்கப்படுகின்றது. கணக்குகளை ஆரம்பிப்பதற்கு கிளைகளுக்கு விஜயம் செய்ய வேண்டிய தேவையை இல்லாமல் செய்துள்ளதுடன், இந்த பிந்திய வெளியீட்டினூடாக, பாவனையாளர்களுக்கு நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்குகள் மற்றும் நிலையான வைப்புகளை ஒன்லைனில் ஆரம்பிக்கும் வசதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், அருகாமையிலுள்ள செலான் வங்கிக் கிளைகள், ATMகள், CDM மற்றும் CDK பகுதிகளை இனங்காணக்கூடிய வகையில் உள்வைக்கப்பட்டுள்ள தேசப்பட வசதியும் காணப்படுகின்றது.

இந்த மெருகேற்றம் செய்யப்பட்ட வெளியீடு தொடர்பில் செலான் வங்கியின் டிஜிட்டல் வங்கியியல் பிரிவின் தலைமை அதிகாரி சமிந்த செனெவிரட்ன கருத்துத் தெரிவிக்கையில், “மேலதிக உள்ளம்சங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் பாதுகாப்பு போன்றவற்றினூடாக, வாடிக்கையாளர்களுக்கு சிறந்த அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் செலான் மொபைல் வங்கிச் சேவை App அமைந்துள்ளது. எமது நாளாந்த வாழ்க்கையில் நாம் பல சவால்களுக்கு முகங்கொடுக்கும் நிலையில், இந்த மொபைல் வங்கிச் சேவை App இன் மெருகேற்றத்தினூடாக, வங்கிக் கொடுக்கல் வாங்கல்கள் முன்னெடுக்கப்படும் அழுத்தம் குறைக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர் தேவைகள் தொடர்பில் அவர்களின் கருத்துக்களின் பிரகாரம் செலான் வங்கியைச் சேர்ந்த நாம் தெளிவாக கவனம் செலுத்தி, செலான் டிஜிட்டல் வங்கிச் சேவைகள் தொடர்ச்சியாக புதிய சௌகரிய மட்டத்துக்கு மேம்படுத்துகின்றோம். இலகுவாக அணுகக்கூடிய வகையில், இந்த டிஜிட்டல் சேவைகளை பாதுகாப்பாகவும், சௌகரியமாகவும் வழங்குவதற்கு செலான் வங்கி தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், ஒரு பிரிவுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தவில்லை.” என்றார்.

மொபைல் app இல் தமது முன்னைய கொடுக்கல் வாங்கல்களை பார்வையிடுவது, தொலைந்த அல்லது களவாடப்பட்ட அட்டைகள் பற்றி அறிவிப்பது, எதிர்காலத்தில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக கணக்குகளையும், கட்டணப்பட்டியல்களையும் பதிந்து வைத்திருத்தல், கணக்குகளுக்கு புனைப்பெயர்களைப் பதிதல் மற்றும் பல அம்சங்கள் அடங்கலாக பல இதர சேவைகளையும் செலான் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. மேலும், ஏற்கனவே காணப்படும் நிலையான வைப்புகள், கடன்கள் மற்றும் வட்டி வீதங்களை கணிப்பிடுதல் போன்ற வசதிகளையும் வழங்குகின்றது.

செலான் வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை உதவி பொது முகாமையாளர் காமிக டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், “எமது வாடிக்கையாளர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வது என்பது, செலான் வங்கியைச் சேர்ந்த எம் முன்னுரிமையாக அமைந்துள்ளது. எமது தீர்வுகள் மற்றும் சேவைகளை இலகுவாக, சௌகரியமாக மற்றும் பாதுகாப்பாக பெற்றுக் கொடுக்கக்கூடிய சகல வழிமுறைகள் தொடர்பில் நாம் தொடர்ந்தும் கவனம் செலுத்துகின்றோம். செலான் மொபைல் App ஐ மெருகேற்றம் செய்வது என்பது, எமது வாடிக்கையாளர்களுக்கு 24/7 நேரமும் வங்கிச் சேவைகளை தடங்கல்களின்றி பெற்றுக் கொடுப்பதற்கு அத்தியாவசியமானதாக அமைந்துள்ளது.” என்றார்.

ஆந்திரா

# ஆளும் கட்சி-எதிர்க்கட்சி இடையே மோதல்











ஆந்திராவில் முதலமைச்சர் `ஜெகன்மோகன் ரெட்டி` தலைமையில் ஒய்.எஸ்.ஆர்.காங்கிரஸ் கட்சி ஆட்சி இடம்பெற்று வருவதோடு ,முன்னாள் முதலமைச்சர் சந்திரி சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம் கட்சி எதிர்க்கட்சியாக இருந்து வருகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம்(17) அங்கு பல்நாடு மாவட்டத்தில் உள்ள மச்சேர்லா நகரத்தில் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் அரசுக்கு எதிராக தெலுங்கு தேசம் கட்சியினர் பேரணி ஒன்றை நடத்தியிருந்தனர்.

இப் பேரணியில் சென்றவர்கள் மீது, ஆளும் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் தொண்டர்கள் கற்களை வீசித்தாக்குதல் நடத்தியதால், இரு தரப்பிலும் மோதல் வெடித்தது.

இதன்போது ஒருவரை ஒருவர் கற்களை வீசியும், தடிகளால் அடித்தும் தாக்குதல் நடத்தியதோடு, தெலுங்குதேசம் கட்சித் தலைவர்களின் வாகனங்களும், வீடுகளும் ஒய்.எஸ். ஆர். காங்கிரஸ் தொண்டர்களால் தீயிட்டு கொளுத்தப்பட்டதாகவும் , கட்சி அலுவலகங்கள் சூறையாடப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இம் மோதலைத் தொடர்ந்து அப்பகுதியில் பெருந்திரளான மக்கள் கூடியதால் கூட்டத்தைக் கலைக்க பொலிஸார் தமது பலத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

மேலும் குறித்த பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐஸ்வர்யா ராயின் பெயரில் போலிக் கடவுச் சீட்டு



நொய்டாவில் சமீபகாலமாகவே சைபர் கிரைம் குற்றங்கள் அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.

அந்த வகையில் ஓய்வு பெற்ற கர்னல் ஒருவருக்கு மார்பக புற்றுநோயை குணப்படுத்தும் மூலிகையைத் தருவதாக கூறி இந்திய மதிப்பில் 1.80 கோடி ரூபாய் மோசடி செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் இது குறித்து சைபர் கிரைம் பொலிஸார் நடத்திய விசாரணையில் ஏக் உபர்முக்வே, எட்வின் காலின்ஸ் மற்றும் ஒகோலோய் டாமியன் ஆகிய 3 நைஜீரியர்கள் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையில் சைபர் கிரைம் குற்றத்தில் ஈடுபட்டது உறுதியானதோடு, மேட்ரிமோனியல் இணையதளங்கள் மற்றும் டேட்டிங் ஆப் மூலம் சைபர் குற்றங்களில் ஈடுபட்டதும் தெரிய வந்துள்ளது.

அதோடு அபோட் பார்மா சூட்டிக்கல்ஸ் என்ற நிறுவனத்தின் பெயரில் மோசடி குற்றங்களில் ஈடுபட்டதும் தெரியவந்ததோடு, அவர்களிடமிருந்து நடிகை ஐஸ்வர்யா ராயின் பெயரில் இருந்த போலிக் கடவுச்சீட்டும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் இச்சம்பவம் தொடர்பாக சைபர் கிரைம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சென்னை

# ஆளுநர் மாளிகையில் விழுந்த மர்மப் பொருள்





சென்னை, கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் (ராஜ் பவன்) முக்கிய விருந்தினர்கள் தங்கும் இல்லமொன்று உள்ளது.

இந்நிலையில் குறித்த இல்லத்திற்கு அருகே நேற்று முன்தினம்(17) ‘ட்ரோனை ஒத்த மர்மப்பொருள் ஒன்று எரிந்த நிலையில் கிடந்துள்ளது. அது செயல் இழந்து விழுந்து இருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெங்களூர்

# 2ஆம் இடத்தில் கர்நாடகா



தென்னிந்திய அளவில் நடத்தப்பட்ட ஆய்வில் உடல் உறுப்புகள் தானம் செய்வதில் கர்நாடகம் 2ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இதுகுறித்து மாநில சுகாதார துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் ” கர்நாடகத்தில் கடந்த சில ஆண்டுகளாக உடல் உறுப்புகளை தானம் செய்ய பலரும் முன்வருகின்றனர்.

குறிப்பாக கடந்த 2021ஆம் ஆண்டில் 70 பேர் உடல் உறுப்புகளைத் தானம் செய்திருந்த நிலையில், நடப்பு ஆண்டில் 143 பேர் உடல் உறுப்புகளை தானம் செய்துள்ளனர். இதில் தட்சிண கன்னடாவில் 72 பேர் உடல் தானம் செய்துள்ளனர்.

இதன்காரணமாக ஒட்டுமொத்தமாக சுமார் 397 பேர் மறுவாழ்வு பெற்றுள்ளனர்.

விபத்தில் சிக்கி மூளைச்சாவு அடைந்தவர்கள், சிகிச்சை பலனின்றி உயிரிழப்பவர்கள் குடும்பத்தினர் உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வருகின்றனர்.

இதனால் கர்நாடகத்தில் உடலுறுப்பு தானம் வெகுவாக அதிகரித்து வருகின்றது” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் முதலிடத்தில் தெலுங்கானா உள்ளமை குறிப்பிடத்தக்கது.

உத்தர பிரதேசம்

# 17 வயதுச் சிறுமி சடலமாக மீட்பு



லக்னோ, உத்தரபிரதேச மாநிலம், புடானில் 17 வயது சிறுமியொருவரைக் காணவில்லை எனவும் அவர் கடத்தப்பட்டு இருக்கலாம் எனவும் குறித்த சிறுமியின் பெற்றோர் அண்மையில் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்திருந்தனர்.

இதனையடுத்து குறித்த சிறுமியைத் தேடும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வந்த நிலையில், அச்சிறுமி, வீட்டிற்கு அருகில் உள்ள ஒரு வயல்வெளியொன்றில் சிறுமி சடலமாக கண்டெடுக்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்நிலையில் சிறுமியின் சடலத்தை கைப்பற்றிய பொலிஸார் அதனை பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

சிறுமி, கொலை செய்யப்பட்டதாக அவரது உறவினர்கள் குற்றம் சாட்டி வரும் நிலையில், இது குறித்த தீவிர விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

சென்னை

# நடிகர் நாஞ்சில் விஜயன் கைது பிரபல தனியார்



நாஞ்சில் விஜயன் தனக்கென யூடியூப் சேனல் ஒன்றையும் நடத்தி வருகிறார். நாஞ்சில் விஜயனும் டிக்டொக் பிரபலமாக அறியப்படும் சூர்யா தேவியும் கடந்த 7 ஆண்டுகளாக நண்பர்களாகப் பழகி வந்துள்ளனர்.

இதற்கிடையே நடிகை வனிதா விஜய குமார் , 2020 ஜூன் மாதம் 27ஆம் திகதி, விஷுவல் எஃபெக்ட்ஸ் இயக்குநர் பீட்டர்பால் என்பவரை மூன்றாவது முறையாகத் திருமணம் செய்து கொண்டார்.

தன்னிடம் விவாகரத்து பெறாமல் விஜயகுமாரைத் திருமணம் செய்து கொண்டதாகப் பீட்டர்பாலின் முதல் மனைவி எலிசபெத் ஹெலன் புகாரளித்தார். பொலிஸார் தற்போது நாஞ்சில் விஜயனை கைது செய்துள்ளனர்.

முதலாவது டெஸ்டில்

# பங்களாதேஷை வென்ற இந்தியா

பங்களாதேஷுக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், சட்டோகிராமில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த முதலாவது டெஸ்டில் இந்தியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 404/10 (துடுப்பாட்டம்: செட்டேஸ்வர் புஜாரா 90, ஷ்ரேயாஸ் ஐயர் 86, இரவிச்சந்திரன் அஷ்வின் 58, றிஷப் பண்ட் 46, குல்டீப் யாதவ் 40 ஓட்டங்கள். பந்துவீச்சு: தஜியுல் இஸ்லாம் 4/133, மெஹிடி ஹஸன் மிராஸ் 4/112, காலிட் அஹ்மட் 1/43, எபொடொட் ஹொஸைன் 1/70)

பங்களாதேஷ்: 150/10 (பந்துவீச்சு: குல்டீப் யாதவ் 5/40, மொஹமட் சிராஜ் 3/20, அக்ஸர் பட்டேல் 1/10, உமேஷ் யாதவ் 1/33)



இந்தியா: 258/2 (துடுப்பாட்டம்: ஷுப்மன் கில் 110, செட்டேஸ்வர் புஜாரா ஆ.இ 102 ஓட்டங்கள். பந்துவீச்சு: காலிட் அஹ்மட் 1/51, மெஹிடி ஹஸன் மிராஸ் 1/82)

பங்களாதேஷ்: 324/10 (வெ.இ: 513 ஓட்டங்கள்) (துடுப்பாட்டம்: ஸகிர் ஹஸன் 100, ஷகிப் அல் ஹஸன் 84 ஓட்டங்கள். பந்துவீச்சு: அக்ஸர் பட்டேல் 4/77, குல்டீப் யாதவ் 3/73, உமேஷ் யாதவ் 1/27, இரவிச்சந்திரன் அஷ்வின் 1/75, மொஹமட் சிராஜ் 1/67)

போட்டியின் நாயகன்: குல்டீப் யாதவ்

முதலாவது டெஸ்டில்

## தென்னாபிரிக்காவை வென்ற அவுஸ்திரேலியா



தென்னாபிரிக்காவுக்கெதிரான முதலாவது டெஸ்டில் அவுஸ்திரேலியா வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், பிறிஸ்பேணில் நேற்று முன்தினம் ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த இந்த டெஸ்டின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியாவின் அணித்தலைவர் பற் கமின்ஸ், தென்னாபிரிக்காவை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, மிற்செல் ஸ்டார்க் (3), கமின்ஸ் (2), ஸ்கொட் போலண்ட் (2), நேதன் லையனிடம் (3) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 152 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், கைல் வெரைன் 64, தெம்பா பவுமா 38 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, ககிஸோ றபாடா (4), மார்கோ ஜன்சன் (3), அன்றிச் நொர்கியா (2), லுங்கி என்கிடியிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 218 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், ட்ரெவிஸ் ஹெட் 92, ஸ்டீவ் ஸ்மித் 36 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்நிலையில் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, கமின்ஸ் (5), ஸ்டார்க் (2), லையன், போலண்டிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 99 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், காயா ஸொன்டோ ஆட்டமிழக்காமல் 36, பவுமா 29

உலகக் கிண்ணம்:

## மூன்றாமிடம் பெற்ற குரோஷியா




கட்டாரில் நடைபெற்று வந்த கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரில் குரோஷியா மூன்றாமிடம் பெற்றது.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மொரோக்கோவுடனான மூன்றாமிடத்துக்கான போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே மூன்றாமிடத்தை குரோஷியா பெற்றிருந்தது.

குரோஷியாவின் முன்களவீரர் லொவ்வோ மேயர் செலுத்திய பிறீ கிக்கை, அவரின் சக முன்களவீரரான இவான் பெரிசிச் கோல் கம்பத்தை நோக்கிச் செலுத்திய நிலையில், அதைப் பாய்ந்து தலையால் முட்டிய பின்களவீரரான ஜொஸ்கோ கவிரால் கோலாக்க குரோஷியா போட்டியின் ஏழாவது நிமிடத்திலேயே முன்னிலை பெற்றது.

பின்னர் அடுத்த இரண்டாவது நிமிடத்திலேயே மொரோக்கோவின் பதிலணித்தலைவர் ஹகின் ஸியெச் செலுத்திய பந்தானது, மேயரின் தலையில் பட்டு வந்த நிலையில் அதை மொரோக்கோவின் பின்களவீரரான அஷ்ரஃப் டாரி தலையால் முட்டிக் கோலாக்க கோலெண்ணிக்கையை மொரோக்கோ சமப்படுத்தியது.

**குரோஷியாவின் முன்களவீரரான மிஸ்லவ் ஓர்சிச் கோலாக்கியதோடு இறுதியில் 2–1 என்ற கோல் கணக்கில் குரோஷியா வென்றது**

தொடர்ந்து போட்டியின் 42ஆவது நிமிடத்தில் சக முன்களவீரரான மார்கோ லிவஜா வழங்கிய பந்தை குரோஷியாவின் இன்னொரு முன்களவீரரான மிஸ்லவ் ஓர்சிச் கோலாக்கியதோடு இறுதியில் 2-1 என்ற கோல் கணக்கில் குரோஷியா வென்றது.

எல்.பி.எல்:

## கொழும்பு ஸ்டார்ஸை வீழ்த்திய கண்டி பல்கொன்ஸ்

லங்கா பிறீமியர் லீக்கில் (எல்.பி.எல்), கொழும்பில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கொழும்பு ஸ்டார்ஸுடனான போட்டியில் கண்டி பல்கொன்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்டார்ஸ், இசுரு உதான (2), பேபியன் அலென், சாமிக கருணாரத்ன (4), ஒஷேன் தோமஸிடம் (3) வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 19.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 106 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் 41 (38) ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 107 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பல்கொன்ஸ், கமிந்து மென்டிஸின் ஆட்டமிழக்காத 51 (48), அன்ட்ரே பிளட்சரின் ஆட்டமிழக்காத 44 (41) ஓட்டங்களோடு 16 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், ஜெஃப்ரி வன்டர்சே



4-0-22-0, பெனி ஹவெல் 3-0-16-0, கசுன் ராஜித 3-0-19-0, கரிம் ஜனட் 2-0-13-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக சாமிக கருணாரத்ன தெரிவானார்.

இதேவேளை, முன்னதாக நடைபெற்ற கோல் கிளாடியேட்டர்ஸுடனான போட்டியில் தம்புள்ள ஓறா வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஓறா, ஷெவோன் டானியலின் 80 (55), ஜோர்டான் கொக்ஸின் 77 (58) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், நுவான் துஷார 4-0-29-1, லக்ஷன் சந்தகான் 3-0-16-0, இஃப்திஹார் அஹ்மட் 2-0-16-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 179 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கிளாடியேட்டர்ஸ், 19.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 130 ஓட்டங்களைப் பெற்று 48 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், லஹிரு உதார 32 (32), அசாட் ஷஃபிக் 28 (14) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், பிரமோத் மதுஷன் 2.4-0-17-3, சிகண்டர் ராசா 3-0-5-2, தசுன் ஷானக 3-0-10-1, நூர் அஹ்மட் 4-0-17-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில், இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நடப்புச் சம்பியன்களான ஜஃப்னா கிங்ஸை ஸ்டார்ஸ் எதிர்கொள்ளவுள்ளதுடன், இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கிளாடியேட்டர்ஸும், ஓறாவும் மோதவுள்ளன.

உக்ரேன்

# புடினின் முகத்தில் குத்தத் தயாராக இருக்கிறேன்

உக்ரேன் ரஷ்யா இடையேயான போர் நடவடிக்கையில் நிறுத்துவதற்கு அமைதி பேச்சு வார்த்தைக்கு ரஷ்யா தயாராக இருப்பதாக பலமுறை அறிவித்துள்ளது.

ஆனால் அதற்கான முன்னெடுப்புகளில் களமிறங்க உக்ரேன் மறுத்துவிட்டது. அது மட்டுமல்லாமல் ரஷ்ய படைகள் கைப்பற்றி வைத்திருந்த உக்ரேனிய பகுதிகளை ரஷ்யாவிடம் இருந்து கைப்பற்றாமல் போர் நடவடிக்கையை உக்ரேன் கைவிடப் போவதில்லை எனவும் அறிவித்துள்ளது.

இதனால் உக்ரேன் ரஷ்யா இடையான போர் இன்னும் பல மாதங்கள் தாண்டியும் தொடரும் என இராணுவ நிபுணர்கள் கூறியுள்ளனர்.

இந்நிலையில் உக்ரேனிய ஜனாதிபதி ஜெலன்ஸ்கி எல்.சி.ஐ தொலைக்காட்சிக்கு நேர்காணல் ஒன்றை அளித்துள்ளார்.

அதில் அவர் கூறியதாவது “ரஷ்ய ஜனாதிபதி புடினின் முகத்தில் நான் குத்த தயாராக இருக்கிறேன்” எனக் கூறியுள்ளார். அதற்கான முதல் வாய்ப்பு நாளைய நாளாக இருந்தாலும் கூட நான் தயாராக இருக்கிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.






## முடக்கப்படும் ஊடகவியலாளர்களின் டுவிட்டர் கணக்குகள்

உலகின் பெரும் பணக்காரர்களில் ஒருவரான எலோன் மஸ்க் ட்விட்டர் நிறுவனத்தை கைப்பற்றியதிலிருந்து, அதில் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

அதே சமயம் ”தனிப்பட்ட நபர்களின் தகவல்களை வெளியிடுபவர்களின் டுவிட்டர் (Titter )கணக்குகள் முடக்கப்படும்” எனவும் எலோன் மஸ்க் எச்சரிக்கை விடுத்து வந்தார்.

அந்தவகையில் அண்மைக்காலமாக வோஷிங்டன் டைம், நியூயோர்க் போஸ்ட் உள்ளிட்ட பிரபல ஊடகங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்களின் டுவிட்டர் கணக்குகள் முடக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனி

## வெடித்துச் சிதறியது உலகின் மிகப்பெரிய மீன் தொட்டி



ஜேர்மனியில் உள்ள மத்திய சதுக்கம் பகுதியில் ரேடிசன் புளூ (Radisson Blu) என்ற ஹோட்டல் அமைந்துள்ளது.

இவ் ஹோட்டலில் கடந்த 29 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய மீன் தொட்டியொன்று உள்ளது.

இத் தொட்டியில் சுமார் 1500 க்கும் மேற்பட்ட மீன்கள் மக்களின் பார்வைக்காக வளர்க்கப்பட்டு வந்தன. அது மட்டுமல்லாது தொட்டியின் கண்ணாடிப் பகுதி வழியே உள்ளே நீந்திச் சென்று மக்கள் கடல்வாழ் மீன் இனங்களைப் பார்வையிடுவதற்கான வசதியும் செய்யப்பட்டு இருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் குறித்த மீன்தொட்டியானது திடீரென வெடித்துச் சிதறியுள்ளது. இதனால் தொட்டியில் இருந்த தண்ணீர் வெளியேறி மீன்களும் தெருக்களில் விழுந்துள்ளன.

இதனையடுத்து ஹோட்டலில் இருந்த 300 பேர் பத்திரமாகவும் மீட்கப்பட்டுள்ளனர் எனவும், விபத்தில் படுகாயமடைந்த ஊழியர்கள் இருவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



பிரான்ஸ்

## 10 பேரின் உயிரைப் பறித்த தீ விபத்து

பிரான்ஸ் நாட்டின் ரோல் மாகாணம் வால்க்ஸ் என் வெலின் நகரில் அடுக்குமாடி குடியிருப்பொன்று அமைந்துள்ளது.

இக் குடியிருப்பில் நேற்றுமுன்தினம்(17) திடீரென தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற தீயணைப்புப் படையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் இவ்விபத்தில் 5 குழந்தைகள் உட்பட 10 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 14 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் காயமடைந்த 4 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க கூடும் எனவும் அஞ்சப்படுகின்றது.

இந்நிலையில் இத்தீ விபத்திற்கான காரணம் என்ன? என்பது குறித்து பொலிஸார் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து

## தாய்லாந்து மன்னர், ராணிக்குக் கொரோனா



தாய்லாந்தின் மன்னர் மஹா வஜிரலோ ங்கோர்னுக்கும், அவரது மனைவியும், ராணியுமான சுதிடாவுக்கும் கொரோனா தொற்று பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இருவருக்கும் தொற்று நோயின் லேசான அறிகுறிகள் இருப்பதாகவும், அதே வேளையில் இருவரும் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும் அரச குடும்பத்தின் பணியகம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட காலத்துக்கு அரச பணிகளை தவிர்க்குமாறு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளதாகவும், அதன் பேரில் மன்னரும், ராணியும் ஓய்வில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது**

முன்னதாக கடந்த இருதினங்களுக்கு முன்பு தாய்லாந்து இளவரசி பஜ்ராகிதியாபா தேசிய பூங்காவில் தனது நாய்களுடன் நடைபயிற்சி சென்றபோது திடீரென மயங்கி சரிந்ததும், மாரடைப்பால் பாதிக்கப்பட்ட அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

## விந்தணுவை ஊசி மூலம் செலுத்தியதால் விபரீதம்

பிரித்தானியாவில் உள்ள மான்செஸ்டர் பகுதியைச் சேர்ந்தவர் `ஷானன் நசரோவிச்`.

23 வயதான இவர் அண்மையில் தான் கர்ப்பம் அடைந்த விதம் குறித்து வெளியிட்ட வீடியோவானது மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த வீடியோவில் ” நான் ஒரு



ஓரினச் சேர்க்கையாளர். எனக்கு 19 வயதாக இருக்கும் போது விந்தணு நன்கொடையாளர் ஒருவர் மூலம் விந்தணுக்களைப் பெற்று அதனை ஊசி மூலம் எனது உடலில் செலுத்தி கர்ப்பம் அடைந்தேன்.

எனக்கு தற்போது ஒரு மகள் உள்ளார். நான் கர்ப்பம் தரித்தவிதம் குறித்து யாரும் நம்புவது கிடையாது. ஆனால் நான் விந்தணுவை ஊசி மூலமாகச் செலுத்தியே குழந்தை பெற்றுக் கொண்டேன் என்பதை நிரூபிக்க என்னிடம் ஆதாரம் உள்ளது” எனத் தெரிவித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 19 டிசெம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.